தமிழ்ப

# ரத்னபாலா

ரபம் 90

விலை ரூ. 2-50

பாலர் வண்ண மாத மலர்



Grams:
COLORCRAFT

THE
ORIENT
COLOR
CRAFTS

an associate concern of
THE ORIENT
LITHO PRESS

Post Box No. 192
8-4-152 — Mundaga Nadar Street,
SIVAKASI-626123

Specialists in manufacture of Photo Offset
Calendars — Table Calendars & Special
Varieties of Sheeter Calendars
Apply for Agency terms



அன்பு என்னும் புது மலரின்
வண்ணங்கள் ஆவோம்
அறிவுக்காக உலகம் ஏழும்
யாத்திரை போவோம்

# ரத்ன பாலா

## அன்பிற்கினிய செல்வங்களே!

**சுக்கில** ஆண்டு விடை பெற்றது. பிரமோதூத
ஆண்டு பிறந்து விட்டது. பொன்னாடையுடுத்தி 'சித்திரை'
பெண், உலா வர இருக்கும் இனிய வேளையில் உங்கள்
அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

பலருக்கு தேர்வுகள் முடிந்தும் சிலருக்கு முடியுந்தறுவா
யிலும் இருக்கிற கால கட்டத்தில் இந்த இதழ் உங்கள்
கையில் கிடைத்துள்ளது. உங்கள் படிப்பு முயற்சிக்கும்
உழைப்புக்கும் பாராட்டுக்கள்! வாழ்த்துக்கள்!

ரத்னபாலாவின் மூலம் பிரதி மாதமும் எண்ணற்ற எழுத்
தாளர்களின் இதயங்களோடு உறவாடிக் களித்துக் கொண்
டிருக்கிறீர்கள். காலத்துக் கேற்ப கருத்தும் புதிய வடிவும்
பொலிவும் பெற்று மாறுகின்றது. எனினும் நம் பாரதத்திற்
கென்று வாய்த்த பல நற்பண்புகளை நாம் மறந்து விடக்
கூடாது. அந்தப் பண்புகள்தாம் உலக நாடுகளின் முன்
நம்மை உயர்த்தி வருகின்றன. உலகையெல்லாம் வாழ
வைக்கின்ற காற்றும் ஒளியும் மழையும் பழமையென்பதற்
காக நாம் அவற்றை ஒதுக்கி விடுவதில்லையல்லவா!

நாம் வளர்ச்சியை நோக்கிச் சென்று கொண்டுள்ளோம்.
எனவே, உங்கள் அறிவாற்றல் பெருக- செயல்திறன்
வளர, உலக மக்களையெல்லாம் நேசிக்கும் அன்பு உங்கள்
உள்ளங்களில் நிறைய வேண்டும். உங்களை உயர்த்திக்
கொள்ள உலகப் பெருமக்களின் வரலாறுகளைப் படியுங்
கள். உங்கள் வருங்காலம் ஒளிமயமாகத் திகழ வேண்டு
மென்பதற்காகவே ரத்னபாலா சிந்தனைப் பேழை உங்களி
டையில் உலா வந்து கொண்டுள்ளது. விடுமுறையில் படி
யுங்கள்; எழுதுங்கள், நம் பாரத சமுதாயம் மேலும் மேன்
மையுற வேண்டுமானால் கல்வியில் கருத்தூன்ற வேண்
டும். மேலும், உங்களுக்குப் பொறுப்புணர்ச்சியும் கடமை
யுணர்வும் கண்ணும் ஒளியும் போல இணைந்திருக்க
வேண்டுமென்பதை மறவாதீர்கள்.

அன்புள்ள
N. நரேந்திரன்.
ஆசிரியர்.

மாலை: 12
ரத்தினம்: 4
ஏப்ரல்: 1990

## 9. தண்டனை யாருக்கு?

ஆலமரத்தின் மேலே ஏறிய வேலு மற்ற நான்கு சாமியார்களை இழுத்து வருவான் என்று ஊர்ப் பெரியவரும் மக்களும் எதிர்பார்த்துக் காத்திருந்தனர். சாமியார்கள் இறங்கி வரவில்லை. சிறிது நேரத்துக்குப் பிறகு வேலு மட்டும் இறங்கி வந்தான்.

''வேலு சாமியார்கள் எங்கே?'' - பெரியவர் கேட்டார்.

''நான் கீழே இருந்து பார்த்த போது அசைந்த கிளையில் நல்லா தேடிப் பார்த்துட்டேன். அங்கே யாரும் இல்லே'' என்றான் வேலு.

''கிளையிலிருந்த சாமியாருங்க ஆகாசத்துக்கா போவாங்க? வேலு மேலே வரப் போறத தெரிஞ்சதும்,






ஒரு கிளையிலிருந்து இன்னொரு கிளைக்கு மாறிட்டிருப்பாங்க. வேலு, நாலைஞ்சு பேரோடு திரும்பவும் மரத்தில் ஏறு. எல்லாக் கிளைகளிலும் தேடிப்பார். அடர்த்தியான ஆலமரம் இது. ஒரு யானையே இருந்தாலும், கீழிருந்து பார்த்தால் தெரியாது. அதனாலே எந்தக் கிளையையும் விடாம பாருங்க'' பெரியவர் கட்டளையிட்டார்.

பெரியவர் 'நாலைஞ்சு பேர்' என்று சொன்னாலும் பத்து இளைஞர்க்கு மேலே மரத்திலே ஏறினார்கள். பெரியவரிடம், ''எந்தக் கிளையையும் விடாம பாக்கச் சொன்னீங்க. நாங்க எந்த இலையையும் விடாமல் பாத்துடறோம்'' என்று கூறிவிட்டு வேலுவும் மரத்தில் ஏறினான்.

வலிமை மிக்க வாலிபர்கள் ஆலமரத்தின் எல்லாக் கிளைகளையும் ஆராய்ந்தனர். அதனால் மரத்தின் கிளைகள் புயல்காற்றில் ஆடுவதைப் போல ஆடின. எங்கும் இலைகளும் கிளைகளும் 'சல சல' சத்தத்தை உண்டாக்கின. மரத்தின் கீழே இருந்த அனைவரும் அண்ணாந்து கிளைகளையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஒரு நாழிகை நேரம் ஓடியது. வாலிபர்கள் ஆலமரத்தின் அணு ஒவ்வொன்றையும் ஆராய்ந்து அலுத்துப் போனார்கள். மரத்தின் மேலே சாமியார்கள் இல்லை. ஒருவர்கூட இல்லை. அதனால் அனைவரும் கீழே இறங்கினர்.

''ஐயா, மரம் முழுதும் பார்த்துட்டோம். மரத்திலே இருந்த பறவைக் கூடுகளுக்குள்ளேயும் பார்த்தோம். மரத்தில் இருந்த சந்து பொந்துகளிலும் பார்த்தோம். சாமியார்கள் யாரும் இல்லை.''

வேலு சொன்னதைக் கேட்டு, மற்றவர்கள் வியப்படைந்தார்கள். மடையனோ இப்போது உண்மையாகவே அழுது ஒப்பாரி வைத்தான்.

''ஏய் சாமி' அழறதை நிறுத்து'' என்று பெரியவர் அதட்டியதும், மடையன் அழுகையை நிறுத்தினான்.

''மேலே ஏறிய நாலு சாமிகளையும் காணோம் என்றால் எப்படி? ஒரு வேளை இந்தச் சாமி சொன்னதைப் போல மரம் அவர்களை விழுங்கி விட்டதா?'' ஒருவர் கேட்டார். அவர் உண்மையான சந்தேகத்தோடு கேட்கிறாரா? அல்லது கிண்டல் செய்கிறாரா? என்பது புரியவில்லை.

அவர் கேட்டதும் மடையன் மீண்டும் அழத் தொடங்கினான். அந்த அழுகையோடு ''ஐயா, நீங்கள் சொல்கிறபடி மரந்தான் விழுங்கியிருக்கும். முதலிலே மரம் விழுங்கியிருக்கும்னு நான் சொன்னது பொய். அப்போது அவங்க மரத்து மேலேதான் இருந்தாங்க. ஆனால் ஒரு பாவமும் செய்யாத இந்த மரம் அவங்களை விழுங்கிட்டதுன்னு சொன்னேனா? அதைக் கேட்டு இந்த மரத்துக்குக் கோபம் வந்



திருக்கும். பொய் சொன்னதற்குத் தண்டனையாக மரம் மற்ற நாலு பேரையும் விழுங்கியிருக்கும்.'' என்று கூறிய மடையன் ஊர்ப் பெரியவர் பக்கம் திரும்பினான்.

''பெரியவரே, புலி, சிங்கம், பூதம், பேய், மரம், மலை முதலியவை யாரை விழுங்கினாலும், விழுங்கிய பத்து நாழிகைக்குள் உங்களிடம் சொன்னால் நீங்கள் மந்திரம் போட்டு அவங்களை மீட்டுடுவீங்கன்னு சொன்னீங்களே, மரம் நாலு பேரை விழுங்கி ஒரு நாழிகைக் கூட ஆகியிருக்காது. அதனால், தயவு செய்து எங்க குருவையும் மற்ற மூன்று சீடர்களையும் உங்க மந்திரசக்தியாலே மீட்டுக் கொடுங்க.''

மடையன் சொல்லிவிட்டுக் குனிந்து பெரியவரின் இரு கால்களையும் பற்றிக் கொண்டான்.

பெரியவருக்கு ஒன்றும் புரியவில்லை. மடையனின் சொல்லும் செயலும் அவரைக் குழப்பின. என்றாலும் அவர் ''ஏய் முட்டை சாமி, அழாம எழுந்து நில்'' என்று கூறினார்.

மடையன் சட்டென்று எழுந்து நின்றான். ''ஐயா, மந்திரத்தாலே நாலு பேரையும் வரவழைக்கிறீங்களா?'' என்று கேட்டுக் கொண்டே, மேல் துண்டால் தன் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

''அசைவ சாமி, அண்டப்புளுகும் ஆகாசப் புளுகுமாக அள்ளிக் கொட்டிகிட்டே போறீங்க. இனியும் நாங்க சும்மா இருந்தா, உங்க புளுகு தொடர்ந்துகிட்டே இருக்கும். உங்க கூட வந்த நாலு பேரு எங்கேயோ மறைஞ்சிருக்காங்க. அவங்களை எப்படியும் இங்கே வரவழைச்சே தீரணும்.''

''பெரியவர் சொன்னதும் மடையன், ''மந்திரம் போட்டுத்தானே, வரவழைக்கப் போறீங்க'' என்று உண்மையான ஆர்வத்தோடு கேட்டான்.

''இல்லை'' என்றார் பெரியவர்.

''மந்திரம் இல்லையா?'' அப்போ எப்படி வரவழைப்பீங்க...?'' மடையன் கொஞ்ச நேரம் யோசித்தான். பிறகு, ''மந்திரமில்லேன்னா, தந்திரத்தாலே வரவழைக்கப் போறீங்க'' என்று உற்சாகத்துடன் கூறினான்.

மடையனின் உற்சாகம் பெரியவருக்கு எரிச்சல் தந்தது. அதனால், ''மந்திரமும் இல்லை, தந்திரமும் இல்லை. தண்டனையால் வரவழைக்கப் போகிறேன்'' என்றார் அவர்.

''தண்டனையாலா? ஐயா, இந்த மரத்துக்குத் தண்டனை கொடுத்து இது விழுங்கிய நாலு பேரையும் வரவழைக்கப் போறீங்களா?''

மடையன் கேட்டதும், பெரியவரின் எரிச்சல் எல்லை மீற, ''அடே, மடையா'' என்று கோபத்துடன் கத்தினார்.

அவரது எரிச்சலையும் கோபத்தையும் உணராத மடையன், ''அடடே! நீங்க நிசமாகவே மந்திரம் தெரிஞ்சவர்தான். என் பேரு என்னன்னு நான் உங்களிடம் சொல்லலே. அப்படியிருந்தும் என் பேரைச் சொல்லிக் கூப்பிட்டு விட்டீங்க. நீங்க சரியான மந்திரவாதி'' என்று கூறினான்.

பெரியவர் திகைத்தார்.

''சாமி, உங்க பேரு என்னன்னு எனக்குத் தெரியாதே! நான் எப்படி உங்க பேரைச் சொல்ல முடியும்?''

''கொஞ்ச நேரம் முன்னாடி என் பேரைச் சொல்லிக் கூப்பிட்டு விட்டு இல்லேன்னு பொய் சொல்றீங்களே?''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடியா? என்ன பேரைச் சொன்னேன்?'' பெரியவர் கூறியபடி யோசித்தார்.

''ஐயா, நீங்க கோபமா இந்தச் சாமியாரை மடையான்னு திட்டினீங்க'' என்று நினைவு படுத்தினான் வேலு. உடனே ''அதுதான்! அதுவேதான் என் பேரு! என் பேரைச் சொல்லிட்டு இல்லேன்னு மறைக்கிறீங்களே?'' என்றான் மடையன்.

பெரியவர் நம்ப முடியாதவராக

''சாமி, உங்க பேரு, மடையனா?'' என்று கேட்டார்.

''ஆமாம்! என் பெயர் மடையன்.''

மடையன் பெருமையோடு கூற, அதைக்கேட்டுப் பெரியவர் உட்பட அனைவரும் சிரித்தனர்.

பொருத்தமான பேர்'' என்றான் வேலு.

''எங்க பரமார்த்த குரு எவ்வளவு பெரிய ஞானி! அவர் வைத்த பேர் பொருத்தம் இல்லாமல் இருக்குமா?''

மடையன் கூறியதும் மற்றொரு முறை அனைவரும் சிரித்தனர்.

''நீங்க சிரிக்ககிறதிலே செய்ய வேண்டியதை மறந்துடாதீங்க! இந்த மரத்துக்குத் தண்டனை கொடுத்து மற்ற நாலு பேரையும் வரவழையுங்கோ.''

பெரியவரின் முகத்திலிருந்த சிரிப்பு மறைந்தது. அவர், ''இதோ வரவழைக்கிறேன். தண்டனை கொடுத்து வரவழைக்கிறேன். ஆனால் தண்டனை மரத்துக்கல்ல, மனிதனுக்கு! மடையனுக்கு! என்று கொஞ்சம் கோபத்தோடு கூறினார்.

''ஐயா, இதென்ன அநியாயம்! நாலு பேரை விழுங்கிய ஆலமரத்தை விட்டுட்டு எனக்குத் தண்டனை தரப் போறீங்களா? மரம் உங்க ஊரைச் சேர்ந்தது. நான் அசலூர்க்காரன். அதனால் தப்பு செய்த மரத்தை விட்டுட்டு என்னைத் தண்டிக்கத் துணிஞ்சிட்டீங்க. இது அடுக்காதுங்க.''

மடையனின் புலம்பலைப் பொருட்படுத்தாத பெரியவர், ''வேலு, இந்த ஆலமரத்திலே நூத்துக்கணக்கான விழுதுகள் தொங்குது. அதுலே சாட்டைய ளவு பருமனுள்ள ஒரு விழுதை வெட்டி எடுத்து வா'' என்றார்.

வேலு விழுதுகளை ஆராய்ந்தான். ஒரு விழுதைத் தேர்ந்தெடுத்து, அதை நாலு முழ நீளத்தில் முறிக்க முயன்றான். ஆலம் விழுது அவ்வளவு எளிதாக அறுபடவில்லை. அதைக் கவனித்த ஒருவன், தன் இடுப்பில் சொருகியிருந்த அரிவாளால் அந்த விழுதை வெட்டி விட்டான். வேலுவின் கைக்கு வந்த விழுது அசல் சாட்டை போலவே இருந்தது. வேலு அதை ஒரு முறை காற்றில் வீசி இழுத்தான். 'சட்'டென்னும் ஓசையை எழுப்பிப் பாம்பு போல உயர்ந்து வளைந்து நெளிந்து தாழ்ந்தது. வேலு அந்த விழுதைப் பெரியவரிடம் கொடுத்தான்.

பெரியவர் அதை ஒரு கையால் வாங்கிக் கொண்டு மடையனைப் பார்த்தார். மடையனின் உடல் நடுங்கியது.

''ஏய் மடச்சாமி, உங்களோடு ஓடி வந்த நாலு பேரையும் இந்த மரமும் விழுங்கலே! மண்ணும் விழுங்கலே! அவங்க எங்கேயோ மறைஞ்சிருக்காங்க. எங்கே மறைஞ்சிருக்காங்க




✱ தாமஸ் ஆல்வா எடிசன் தன் குழந்தைகளைப் பெயர் சொல்லியே அழைத்ததில்லை. அப்போதுதான் எடிசன் புதிய தந்திக்கருவிகளைக் கண்டுபிடித்து அதை ஒரு பெரும் தொகைக்கு விற்றிருந்தார். அந்த மகிழ்ச்சியில் தனது முதல் இரண்டு குழந்தைகளை யும் கடைசிக் காலம் வரை புள்ளி-வரி என்றே அழைத்து வந்தார்.

என்பது உங்களுக்குத்தான் தெரியும். அவங்களைக் காட்டுங்க! இல்லை அவங்க மறைஞ்சிருக்கிற இடத்தைச் சொல்லுங்க! ரெண்டும் செய்ய லேன்னா, இந்த விழுது உங்க உடம்புத் தோலை உரிச்சி எடுத்திடும்.''

மடையன் பயந்தான்.

''ஐயா, மற்ற நாலு பேரும் எங்கே இருக்காங்கன்னு எனக்குத் தெரியாது. நான் மரத்திலிருந்து இறங்கிய போது அவங்க கிளையிலே உட்கார்ந்திருந் தாங்க. அவங்களை இந்த மரந்தான் விழுங்கியிருக்கும். அதனாலே இந்த மரத்தை அடிச்சு உதைச்சு விசாரியுங்க. உண்மை தெரியும்.''

மடையன் சொன்னதைக் கேட்ட தும், வேலு, ''ஐயா, இந்தச் சாமி மறுப டியும் புளுக ஆரம்பிச்சுட்டுது. இனி யும் சும்மா இருக்காதீங்க. விழுதாலே விளாசுங்க'' என்றான்.

பெரியவர் விழுதை ஒரு முறை சொடக்கினார். பிறகு அந்த விழுதை ஏந்திய கையை மெல்ல உயர்த்தியபடி மடையனை நோக்கி ஓர் அடி எடுத்து வைத்தார். அவர் தன்னை அடிப்ப தைத் தன்னால் தடுக்க முடியாது என் பதை உணர்ந்த மடையன் திடீரென்று பயத்தை உதறித் தள்ளினான். நெஞ்சை நிமிர்த்தி நின்றான். இரண்டு கைகளையும் வானத்தை நோக்கி உயர்த்தினான்.

''குருவே! எங்களை விட்டு மறைந்து சொர்க்க லோகம் போய் விட்ட பரமார்த்த குருவே. இந்த ஊர்க் காரங்க அநியாயமா அடிக்க வர் றாங்க. நீங்க ஞான குரு என்பது உண் மையானால், என்னை அடிக்க வரும் பெரியவரைத் தடுத்து நிறுத்துங்கோ.''

மடையன் சத்தம் போட்டுச் சொன் னான். இப்போது அவன் உடம்பில் நடுக்கம் இல்லை. முகத்தில் பயம் இல்லை. அவன் உறுதியோடு, தன் குரு தன்னைக் காப்பாற்றுவார் என் னும் நம்பிக்கையோடு நின்றிருந்தான்.

மடையனது தோற்றத்தில் ஏற்பட்ட மாற்றம் பெரியவரை ஒரு நிமிடம் அதிர்ச்சியடையச் செய்தது. மறுநிமி டம் அவர் மடையனைத் தாக்க விழு தைச் சுழற்றினார்.

மடையன் ''குருவே!'' என்று கத்திய படி கண்களை மூடிக்கொண்டான்.

அதே நேரத்தில், ''நிறுத்து! நிறுத்து! '' என்னும் கூக்குரல் கேட்டது.

தொடரும்

---

✱ ஒரு சமயம் சரோஜினி தேவி காந்தி ஜியிடம் ''ஏழைகளிடம் ஆண்டவன் ரொட்டி வடிவத்தில் வருகிறான் என்ற பொன் மொழியை யார் சொன்னது சொல்லுங்கள் பார்க்கலாம்'' என்றார்.

காந்திஜி அதைக் கேட்டுத் தீவிரமா கச் சிந்தித்துப் பார்த்தார். அந்தப் பொன்மொழி அவருக்கு மிகவும் தெரிந்ததாகத் தோன்றியதே தவிர, அதைக் கூறியவர் யார் என்பது புலப்ப டவில்லை. ''எனக்கு நினைவுக்கு வர வில்லை. நீயே சொல்லிவிடேன்'' என் றார் காந்திஜி.



''சொல்லட்டுமா? தாங்கள்தான் அதைச் சொன்னது'' என்றார் சரோ ஜினி தேவி.

முல்லாக் கதைகள்:

# பிறந்த நாள்

மா. பால்ராஜ்



சிறுவயதில் முல்லா தன் வீட்டில் யார் எது சொன்னாலும் அதற்கு நேர்மாறாக நடப்பது வழக்கம். பெரியவர்கள் பன்முறை திட்டியம் அவரை அதிலிருந்து மாற்ற முடியவில்லை. எனவே வீட்டில் எல்லோரும் முல்லாவின் பழக்கத்திற்கேற்ப வேலை செய்ய வேண்டுமென்றால் அதற்கு எதிராகச் சொல்வது வழக்கம். முல்லாவும் சொன்னதற்கு மாறாக செய்துவிடுவார். வேலையும் சுலபமாக நடந்து விடும்.

முல்லாவின் பிறந்தநாள் வந்தது. அவரது தந்தை கடைக்குச் சென்று விருந்துக்கு வேண்டிய சாமான்களை வாங்கி கழுதையின் மேல் ஏற்றி வீட்டுக்குக் கொண்டு வந்தார். கழுதையின் இடப்பக்கத்திலிருந்த கூடையை இறக்கிய பொழுது வலப்பக்கக் கூடை கீழே சாய ஆரம்பித்ததைக் கண்ட முல்லாவின் தந்தை ''முல்லா, இடப்பக்கச் சுமையைத் தூக்கு'' என்று கூறினார். அப்பொழுதுதான் முல்லா வலப்பக்கத்துச் சுமையைத் தூக்குவான் என்ற நம்பிக்கையில்.

ஆனால் முல்லா தன் தகப்பனார் கூறியபடி இடப்பக்கத்தைத் தூக்கிப் பிடித்தார். அதனால் வலப்பக்கக் கூடை கவிழ்ந்து மாவு சர்க்கரை யாவும் கொட்டி வீணாகி விட்டது.

முல்லாவின் தந்தை கோபத்தோடு முல்லாவிடம், ''ஏன் வழக்கத்திற்கு மாறாகச் செய்தாய்?'' என்று கேட்டார்.

அதற்கு முல்லா, ''எனது பிறந்த நாளான இன்று முதல், குழந்தை விளையாட்டை விட்டுவிட்டு பெரியோர்கள் சொன்னபடி நடப்பது என்று தீர்மானித்து அதன்படி செயல்பட்டேன்'' என்று கூறினார்.

கருவேட்டி ஜமீந்தார் கண்கள் இளகின. முகத்தில் பழம் சரித்திரம் ஒன்று சோகமாகப் படிந்தது. வெறித்துப் பார்த்தார். மெலிந்த குரலில் - எல்லா ஓவியமும் போயிடுத்தம்மா! என்றார்.

ஏன் என்னாச்சு? என்றாள் கவிதா! அருகில் கிரி அவரை அதிக கவனத்துடன் பார்த்தான்.

எனக்கு இரண்டு பிள்ளைகள்! எவ்வளவோ படிக்க வச்சேன்! ஆனா ஒருத்தரும் சரிப்பட்டு வரல்லை! எல்லோரையும் வீட்டை விட்டு துரத்திட்டேன்! ஆனால் அதுக்கு முன்னாடியே என்னை ஓட்டாண்டியா ஆக்கிட்டாங்க!

கவிதாவுக்கு விசனம் எழுந்தது. பேசவில்லை.

என் முப்பாட்டனார் ஜெகவீரபாண்டியனார் பெரிய கலைஞர். ஓவியம் போடுவார்! வீடு முழுக்க பழைய கலைப்பொருள்கள் வாங்கி வச்சிருந்தார். ஏகப்பட்ட பொருள்! விதவிதமான சாண்டிலியா விளக்கு, கண்ணாடி கூஜாக்கள், ரொக்கோகோ ஜாடிகள், கடிகாரங்கள் அடேயப்பா கணக்கு வழக்கு கிடையாது. ஹும்ம்.... என்று சொல்லி இழுத்தார், அவர்.



ஏன், பொருள் எல்லாம் என்னாச்சு?

அதிலே தான் சாப்பிட்டுக்கிட்டு இருக்கேன்.

கவிதா பெருமூச்சுடன் திரும்பி னாள். ஏன் ஸார்! சொத்து எதுவும் இல்லையா?

இருந்திச்சு! ஏராள நிலம்! அத்தனை யும் பிள்ளைங்களுக்கே போயிடுச்சு! அதான் விரட்டி விட்டுட்டேன். அப்பு றம் நான் பொழைக்கிறது எப்படி? இதுங்களைத்தான் ஒவ்வொன்றாக வித்து சாப்பிடறேன். முப்பது வருஷம் சாப்பிட்டாச்சு! என்றார் ஜமீன்தார் பெருமூச்சுடன்.

ஓவியங்க எல்லாத்தையும் வித் தாச்சா?

ஆமாம் பொண்ணு. அதிலே தான் முதல்லே ஆரம்பிச்சேன்.

கேட்கறதுக்கு வருத்தமா இருக்கு ஸார்.

என்னம்மா செய்யறது! நாற்பது வருடத்துக்கு மேலே வாழ்ந்தவனும் இல்லை நாற்பது வருடத்துக்கு மேலே வீழ்ந்தவனும் கிடையாதுன்னு சொல் வாங்க. நாற்பது வருஷம் நான் வாழ்ந் தாச்சு! இப்போ விழறேன்! ஆமாம் இப்போ என்ன விஷயம் அதைச் சொல்லுங்க!



ஸார்! உங்க ஓவியத்திலே ஆஸ்திரேலிய மைனா ஒரு கூண்டிலே இருக்கிறாப் போல ஒண்ணு இருந்திச்சு, இல்லே?

ஆமாம்மா! எங்க காலத்திலே ஒரு கூண்டு ரொம்ப நாளா இருந்திச்சு! அதிலே அந்த மைனா இருக்கும்! ரொம்ப புத்திசாலியான மைனா!

அந்த மைனா என்ன ஆச்சு? கூண்டு என்ன ஆச்சு?

அந்தக் கேள்வியைக் கேட்டதுமே, அவர் பார்வை மேலே எகிறியது.

தமது நீண்ட துண்டை எடுத்துக் கண்களைத் துடைத்தார்.

கம்மிய குரலில், **ஏம்மா பொண்ணு**, எதை நினைக்க **வேணா**மின்னு நினைக்கிறேனோ **அதை** நினைக்க வைக்கறியே, என்றார்.

ஸாரி ஸார்! உங்களைப் பாதிச்ச துன்னா நீங்க சொல்ல வேண்டாம் மன்னிச்சிடுங்க!

பரவாயில்லைம்மா! துக்கத்தைச் சொல்லிச் சொல்லித்தான் ஆத்தணும் பாங்க. நீ கேட்டதும் நல்லதுக்குத்தான்! அந்த மைனா இருக்கே எங்களுக்கு பரம்பரை சொத்து! அதை மட்டும் யாரும் விற்கக்கூடாதுன்னு எங்க முப்பாட்டனார் உத்தரவு!

ஓகோ!

அந்த மைனாகிட்டே ஒரு ரகசியம் உண்டுன்னு அவர் சொல்வாராம்!

என்ன ரகசியம்?

சொல்றேன். என் முப்பாட்டனார் இருக்காரே அவர் தானே இத்தனை கலைப்பொருளையும் வாங்கி வச்சாரு! அவர் அந்த நாளிலே கப்பலையே வாங்கினாராம்! வியாபாரத்திலே பெரிய கெட்டிக்காரர். அவர் தான் நிறைய பொருளைச் சேர்த்தது. அவர் இறக்கும் போது அத்தனை பொருளையும் பார்த்து கண்ணீர் விட்டாராம்!

எதுக்கு?

தனக்கு பின்னாடி வர்றவங்க இதைக் கட்டிக் காக்கணும்னு நினைச்சாராம். கவலை வந்துட்டுது!

பின்னாடி வர்றப்போற பரம்பரை மேலே அவருக்கு நம்பிக்கை இல்லை. இத்தனை கஷ்டப்பட்டு சேர்த்ததை எல்லாம் பாழாக்கிடுவாங்களோன்னு நினைச்சிருக்கார். அதைத்தான் நான் செய்றேன்! என்று சொல்லி ஜமீந்தார் துண்டை எடுத்து மீண்டும் கண்களைத் துடைத்தார்.

கவிதாவும் கிரியும் அசையாமல் உட்கார்ந்திருந்தார்கள். அவர் தொடர்ந்தார்.

இந்த மாதிரி பரம்பரைக்காரங்க பின்னாடி அழிச்சுடக் கூடாது என்கிறதுக்காக ஒரே யோசனை பண்ணினாராம்! அதாவது பிற்காலப் பரம்பரையில் கஷ்டம் யாருக்காவது வந்திச்சுன்னா அவங்களுக்கு ஒரு ரகசியமான புதையலை வச்சிருக்கணும்ன்னு நினைச்சா

---

✱ டோனி என்ற 11 வயது அமெரிக்க சிறுவன் 30 ஆயிரத்து 500 கிலோ மீட்டர் தூரம் வரை விமானத்தின் மூலம் உலகைச் சுற்றிவந்து உலக சாதனை புரிந்துள்ளான். பல நாடுகளுக்கும் மூன்றே வாரங்களில் சென்று வந்தள்ளான்.

சா.இரா.மணி



ராம்.

ரொம்ப உன்னதமான மனிதர். என்றாள் கவிதா.

ஆமா! விசாலமான இதயம்! புத்திக் கூர்மை! அவர் என்ன செஞ்சாருன்னா, எங்கேயோ ஒரு இடத்திலே ரகசியமா ஒரு புதையலை வச்சுட்டாராம்! அதிலே நிறைய தங்கமும், வைரமும் வச்சுட்டாராம்! அப்புறந்தான் இறந்து போனாராம்.

இப்போ அந்தப் புதையல் பிரயோசனப்பட்டதா?

இரு! இரு! அதைப் பற்றித்தான் சொல்ல வரேன்! அவரோட பிள்ளைதான் எங்க பெரிய பாட்டனார். செல்வந்தராம பாண்டியன்.

ஓ!

அவரை எங்க முப்பாட்டனார் நல்லா வளர்த்துட்டு வந்தாராம்! அவர் இறக்கும் போது பெரிய பாட்டனார் கிட்டே புதையல் ரகசியத்தைச் சொன்னாராம்.

இதோ பாரப்பா! பரம்பரையிலே கஷ்ட தசை வந்து கலைப்பொருள் எல்லாம் போயிடக் கூடாது! அதனாலே புதையல் ஒண்ணு வச்சிருக்கேன்! தேவைப்பட்டால்தான் இதை எடுக்கணும். அதுவரை ரகசியமா இருக்கறதுக்கு யுக்தி ஒண்ணு பண்ணியிருக்கேன்! இந்தா இந்தச் சுவடியை வச்சுக்க! இதிலே தான் புதையல் இருக்கிற இடம் எழுதி வச்சிருக்கேன்! இந்த சுவடியை ரகசியமா வச்சுக்க! தேவைப்பட்டால் மட்டும் எடுத்துப் பாருன்னு சொன்னாராம்.

பெரிய பாட்டனார் அந்தச் சுவடியை அழுகையோடு வாங்கிட்டாராம். 'அப்பா! கவலைப்படாதீங்க! என் வாழ்க்கையிலே இதை இழக்காமல் இருக்க வழி பார்ப்பேன்! எதையும் இழந்திர மாட்டேன்'னு உறுதி சொன்னாராம்.

முப்பாட்டனார் அப்போ தான் அந்த ஆஸ்திரேலிய மைனா ஜோடியைக் காண்பித்தாராம்.

இந்த ஜோடிங்க ரொம்ப அபூர்வ ஜோடிங்க! ஒன்பது மாதக் கப்பல் பிரயாணத்திலே இதை ஆஸ்திரேலியாவிலே வாங்கினேன்! இந்த ஜோடிங்க கிட்டே ஒரு அதிசயம் இருக்கு! இந்தப் பறவைங்க பத்து வருஷம் தான் வாழும்! இந்தப் பத்து வருஷத்திலே முதல்லே ஒரு ஆண் குஞ்சும், இரண்டாவது ஒரு பெண் குஞ்சும் தான் உற்பத்தி பண்ணிக்கும். அதுக்கு மேலே இனவிருத்தி பண்ணாது! இந்த மைனா கிட்டே முக்கிய குணம், முதல் பரம்பரைக்கு நாம்ப என்ன வார்த்தை கற்றுக் கொடுத்தோமோ அதே வார்த்தைகளை பின்னாடி வளர்ந்து வர்ற பரம்பரை ஜோடியும் அப்படியே ஒப்பிக்குமாம்!

ஓ! ரொம்ப அதிசயமா இருக்கே! என்றாள் கவிதா!

---

✱ டெலிபோன் கண்டுபிடிக்கப்பட்டு நூறு ஆண்டுகள் ஆனதைக் கொண்டாட இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா, ஆகிய மூன்று நாடுகளும் தபால் தலைகள் வெளியிட்டன. காரணம் டெலிபோனைக் கண்டுபிடித்த பெல் பிறந்தது இங்கிலாந்தில்! வாழ்ந்தது கனடாவில்! டெலிபோன் அபிவிருத்தி அடைந்தது அமெரிக்காவில்!

தொகுப்பு: சா.இரா. மணி



பெரியம்மா, அப்போது காப்பி கொண்டு வந்தாள்.

சாப்பிடுங்க! என்றார். ஜமீந்தார் முகத்தில் உள்ள வியர்வைப் பொடிக ளைத் துடைத்துக் கொண்டார்.

எல்லோரும் காப்பி அருந்தினார் கள்.

கவிதா குறுக்கிட்டாள். ஏன் ஸார்! யாரும் சொல்லிக் கொடுக்காமலே ஒவ் வொரு பரம்பரை ஜோடியும் அந்த வார்தைகளைத் திரும்பத் சொல் லும்னு சொல்றீங்களா?

ரொம்ப கரெக்ட்! ஒவ்வொரு ஜோடி பிறக்கும் போதும் அது மனசிலே அந்த வார்த்தைகள் பதிந்துதான் பிறக்குது! ரெண்டு வருஷம் வளர்ச்சி ஆயிடுத் துன்னா 'மிகினா, மிகினா, டும் டும் டும் மிகினா'ன்னு சொன்னா அதுக்கு அந்த வார்த்தை நினைவுக்கு வந்து விடும்.

இந்தப் பறவைகளின் இந்தக் குணத்தை ஆஸ்திரேலியாவிலே உள்ள பழம்குடிங்க ரொம்ப உபயோ கிச்சு வந்தாங்களாம்! ஏதாவது பொருளை மறைச்சு வச்சுட்டு, அது இருக்கிற இடத்தை சுருக்கமான சங் கேத பாஷையிலே இந்தப் பறவைக ளுக்குச் சொல்லிக் கொடுத்துடுவாங்க ளாம். அப்புறம் கவலையில்லாமல் இருந்திடுவாங்களாம்.

ஓ! பிரமாதம்.

முதன் முதல்லே இங்கிலீஷ்காரங்க அங்கே போனாங்களே! காட்டுக் குள்ளே இந்தப் பழங்குடிங்க பொருளை மறைச்சு வச்சுட்டு எப்ப டியோ கண்டு படிச்சு எடுக்கிறாங்க ளேன்னு ஆச்சரியப்பட்டாங்களாம். அப்புறம் தான் இந்தப் பறவைங்களை உபயோகிக்கிறதாகத் தெரிஞ்சது.

விசித்திரமா இருக்கே! இந்தப் பறவை இங்கே இருக்கா? என்று பர பரத்தாள் கவிதா!

அதுதாம்மா சொல்ல வரேன்! எங்க முப்பாட்டனாருக்கு அப்புறம் வந்த பெரிய பாட்டனார் 30 வயசுக்குள்ளே இறந்துட்டாரு! திடீர்னு வண்டி மோதி போயிட்டாரு! அதிலே துரதி ருஷ்டம் அந்தப் புதையல் பற்றின ஏடு கேட்பாரற்று கிடந்திருக்கு. கரையான் ஏறி அரிச்சுடுத்து! முழுக்கவும் நாசம்.

ஐயோ! மைனா என்ன ஆச்சு?

உபயோகம் தெரியாம அதுங்களை வித்துட்டாங்க! அதை வித்த சமயம் என் பெரிய பாட்டி ஊரில் இல்லாத சமயம்! அவ அப்புறம் வந்து மைனா இல்லாததைப் பார்த்து வயிற்றிலும் மார்பிலேயும் அடிச்சுக்கிட்டிருக்கா! 'ஐயோ! அந்த மைனாங்களுக்கு புதை யல் தெரியும்ன்னு சொல்லுவாங்களே! அதை வித்துட்டீங்களே!'ன்னு அழுதி ருக்கா. அப்புறம் அந்த மைனா கிடைக் கலை. பாட்டி மட்டும் புலம்பிக்கிட்டே என் சொந்தக் காரங்களுக்கு அந்த மைனா பற்றி சொல்லியிருக்கா! அதுக்கு எப்படி புதையல் இருக்கிற இடம் தெரியும். அதை என்ன சொன்னா பேச வைக்கலாமுன்னு அந்த மிகினா மிகினா டும் டும் டும் மிகினா மிகினா மந்திரத்தையும் சொல் லித் தந்திருக்கிறாங்க!

ஆனா என்ன பிரயோசனம்? யாரும் அக்கறை எடுத்துக்கலை! எங்க குடும்பத்திலே 'பாலு'ன்னு ஒருத்தன் வேலைக்காரனா இருந்தான். அவன் அந்த மைனா மந்திரத்தைக் கேட்டுக் கிட்டு வீட்டை விட்டு போயிட்டதாகக் கேள்வி!

மைனாவைக் கண்டு பிடிச்சு, புதை யலை எடுத்திருவேன்னு சொன்னதாக வும் கேள்வி. ஆனா இது வரையில் யாரும் எதுவும் தெரிஞ்சதா தெரியலை.

நீண்ட நேரம் பேசிவிட்ட ஜமீந்தார் சிறிது ஆசுவாசமெடுத்தார்.

அவரது தழைந்த பார்வையும், நீள மான மூச்சுக்களும் அவர் மீது இரக் கத்தை உண்டாக்கின.

ஸார்! என்று கவிதா அவரை மெள்ள அழைத்தாள். இப்போ இந்த மைனா விஷயமா பல விஷயங்கள் எங்க காதிலே விழுந்திருக்கு!

அப்படியா அம்மா!

ஆமாம்! அந்த மைனாவைப் பற்றி தெரிஞ்சுக்கத்தான் உங்ககிட்டே வந்தோம்! அதுக்கு உதவினதே அந்த ஓவியக் கண்காட்சி!

ஓ! அப்படி விசாரிச்சு வந்தீங்களா? ரொம்ப மகிழ்ச்சி! மைனா பத்தி என்ன தெரிஞ்சது பொண்ணு!

சொல்றேன் ஸார்! எனக்கு ஒரே ஒரு கவலை! நீங்க சொன்ன புதையல் பறி போயிடுச்சா?

இல்லை. இது வரை போகலை.

அது எப்படி உங்களுக்குத் தெரியும்?

வாங்க... சொல்றேன்...

இரண்டு பேரையும் அழைத்துக் கொண்டு மாளிகைக்குள் போனார். பழங்கால கட்டிடம்.

பெரிய பெரிய அறைகள்! பெரிய பெரிய நடைகள்! பெரிய பெரிய தூண்கள்!

வாழ்ந்து கெட்டுப் போன கட்டிடம்! கம்பீரம் இருந்தாலும் அங்கங்கு காறைகள் உதிர்ந்து போயிருந்தன.

அந்த மாளிகையுள் போவதே சரித்திர காலத்துக்குள் போவது போல் இருந்தது.

கவிதாவுக்கும், கிரிக்கும் புல்லரித்தது.

திடீரென்று இருட்டான நடை ஒன்று எதிர்ப்பட்டது.

அதில் மெள்ள நடந்தார்கள்.

தரைப் பகுதி அரித்து அங்கங்கே குழிகள் பதித்திருந்தன.

இருட்டு கூடிக் கொண்டே போக, 'கம்ம்' என்று ஒரு வாசனை முகத்தைத் தாக்கியது.

ஊதுபத்தி வாசனை! தலையை வேசாகச் சுழற்றியது.

பார்த்துப் படி ஏறுங்க! என்றார் ஜமீந்தார்.

இருவரும் மெள்ள கால் வைத்து ஏறினார்கள்.

ஒரு இருட்டான அறையில் கால் வைத்தார்கள்.

பாருங்க! என்று சொன்னார் அவர்.

எதிரே பார்த்தவர்களுக்கு குபீர் என்று குடல் கலங்கியது.

கிரி கவிதாவின் கையைப் பற்றினான்.

(தொடரும்)

## விடுகதைகள்

1. அறுக்க உதவாத கருக்கு அரிவாள் அது என்ன?
2. இரண்டு வீட்டுக்கு ஒரே விட்டம் அது என்ன?
3. இருட்டு வீட்டில் முரட்டுச் சிப்பாய் அது என்ன?
4. எத்தனை பேர் ஏறினாலும் சலிக்காத குதிரை அது என்ன?
5. கருத்த பாறைக்கு வெளுத்த வேர் அது என்ன?
6. கழுத்தை அறுத்தால் கண் தெரியும் அது என்ன?
7. கூடவே வரும் உதவி செய்யாது. அது என்ன?
8. சேற்றுக்குள்ளே செங்கோழி முட்டை அது என்ன?
9. பகலிலே தூங்கி இரவிலே விழிப்பவன் அவன் யார்?

எம்.பாலசுப்ரமணி

விடை: 1.பிறைச்சந்திரன், 2. மூக்கு, 3.பூட்டு, 4.திண்ணை, 5. யானைத்தந்தம், 6.நுங்கு, 7.நிழல், 8.வெங்காயம், 9.விண்மீன்.

# கேட்டால் கிடைக்கும் வள்ளல் பதில்கள்!

● வள்ளல் அவர்களே! பரீட்சைக்குப் படிக்காமலேயே பாஸ் பண்ணிவிட வேண்டும் என்று சில மாணவர்கள் நினைக்கிறார்களே! அவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பா.வசந்தன், சிவகாசி**

■ பாஸாக அந்த முறையும் இருக்கிறதோ? ஆசிரியருக்கு டிமிக்கி கொடுத்து 'பிட்' அடித்து வசமாக வரலாற்றுப் பரீட்சையில் பிடிபட்டு 'டி.சி' வாங்குவதற்கு அந்த நினைப்பே வேண்டாம். காலையில் '4 மணிக்கு' எழுந்து 'கொசு' அடிக்காமல் படிக்க ஆரம்பியுங்கள். முழு ஆண்டுத் தேர்வு வந்து விட்டது.



● மாணவர்களைத் தண்டிக்க ஆசிரியருக்கு உரிமை உண்டா?

**ஆர்.சூரியநாராயணன், ஈரோடு**

■ ஏதேது! உங்கள் கேள்வியைப் பார்த்தால் போனவாரம் 'செமத்தியா' எதுவும் வாங்கினீர்களோ? வள்ளலைப் பொறுத்தவரை 'பிரம்பை'க் காட்டிலும் 'அன்பை' ஆயுதமாக பிரயோகிப்பதுதான் இக்கால ஆசிரியருக்கு நல்லது.




● வள்ளலே! இந்திய அணி நேரு கிரிக்கெட் போட்டி, பாகிஸ்தான் தொடர் ஆகியவற்றில் தோற்றது ஏன்?

**இரா.பாஸ்கர், ஈரோடு**

■ வெற்றி தோல்வி இயல்புதான். இருந்தாலும் புதிய இளைஞர்களைக் கூட்டிச் சென்று விளையாட வைத்ததால் ஒவ்வொருவராக 'பெவிலியனுக்கு' பேட்டைத் தூக்கிக் கொண்டு நடந்ததைத்தான் பார்க்க முடிந்ததே தவிர 'ரன்'கள் எங்கே வந்தன. எப்படியோ இந்திய வீரர்களைக் 'கிளீன் போல்ட்' செய்து விட்டார்கள்!



● புத்தகங்களை இரவல் வாங்கிப் படிக்கலாமா?

**எம்.செல்லையா, சாத்தூர்**

■ நல்ல புத்தகங்களாக வாங்கிப் படியுங்கள். ஆனால் சீக்கிரமாகத் திருப்பியும் கொடுத்து விடுங்கள். இல்லையென்றால் இரவல் புத்தகத்தை 'எலிப் பொந்தில்'தான் தேட வேண்டும்.



★● அடுத்த '2000'ம் ஆண்டில் உலகம் எப்படி இருக்கும்?

**பி.கோவிந்தசாமி, ஊத்தங்கரை**

■ உண்மையிலே பகலில் இருட்டாகவும் இரவில் வெளிச்சமாகவும் இருக்காது. ஒரு வேளை, உங்களுடன் ஊத்தங்கரையில் 'ரோபாட்' இயந்திர மனிதர்கள் 'கோலிக்குண்டு' விளையாடலாம். அழுகுணி ஆட்டமெல்லாம் ஆட முடியாது. ஜாக்கிரதை! மாரம்பட்டியிலிருந்து சந்திரமண்டலத்துக்கு 'ஏர் பஸ்' விடலாம்.



**★ இக்குறியிட்ட கேள்வி ரூ. 10/- பரிசு பெறுகிறது.**

● எனது நண்பனின் பிறந்த நாளுக்கு ஏதாவது புத்தகம் அளிக்கலாம் என உள்ளேன். எந்தப் புத்தகம் வாங்கிக் கொடுக்கலாம்!

**என்.சிவகுமார், பரங்கிப்பேட்டை**

■ 'தம்பிக்கு டாக்டரின் கடிதங்கள்' என்ற புத்தகத்தை டாக்டர்.கு.கணேசன் எழுதியிருக்கிறார் தெரியுமா? உடல் உறுப்புக்களைத் தனித்தனியே கழற்றி கட்டுரை ஆக்கியிருக்கிறார். அதை வாங்கிக் கொடுங்கள். உங்கள் நண்பன் டாக்டராக வாழ்த்துக்கள்.




● வள்ளலே உமக்குப் பிடித்த குழந்தை எழுத்தாளர் யார்?

**க.பாஸ்கர், வந்தவாசி**

■ குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா அவர்கள் தமிழ்நாட்டுக் குழந்தைகளின் சிந்தனையைத் தூண்டிய பெருந்தகை. குழந்தைகள் இலக்கியத் திறனுக்கென்று 'ஞானபீடப்பரிசு' பெற்ற டாக்டர் பூவண்ணன் அவர்கள் இறவாப்புகழ் வாய்ந்த தம் கதைகளால் அரிய தொண்டு செய்து வருகின்றவர்.





நீதிக்கதைகள்

# பொறாமை

**க**னித்திரர் என்று ஒரு முனிவர் இருந்தார். அவர் அடக்கம் உடையவராயும் தெய்வபக்தி உள்ளவராயும் இருந்தமையால் அவரிடம் எல்லோரும் பிரீதி வைத்திருந்தார்கள். அவருக்குச் சகோதரர் சிலர் உண்டு.

அவர்களிடத்தில் பல கெட்ட குணங்கள் நிரம்பியிருந்தன. அதனால் அவர்களை எல்லோரும் வெறுத்தார்கள். கனித்திரர் எல்லோராலும் கொண்டாடப்பட்டதைக் கண்டு அவர்களுக்குப் பொறாமை உண்டாயிற்று. அதனால் எப்படியாவது அவரைக் கொன்றுவிட வேண்டும் என்று அவர்கள் தீர்மானித்தார்கள்.

அவர்கள் அதற்காக ஒரு யாகம் செய்து, அதிலிருந்து பெரிய பூதம் ஒன்றை உண்டாக்கி, அவரைக் கொன்றுவிட்டு வரும்படி அதை ஏவினார்கள். அந்தப் பூதம் கனித்திரரிடம் சென்றது, அவருடைய சாந்தம், தெய்வபக்தி முதலிய நற்குணங்களைக் கண்டு, "இவ்வித நல்ல சுபாவம் உடையவரை எவ்வாறு அணுகுவது? எப்படிக் கொல்வது?" என்று தயங்கி நின்றது. பிறகு அங்கே ஒன்றும் செய்ய முடியாததால், "இவரைக் கொல்லும்படி அந்த மகா பாவிகள் ஏன் ஏவினர்?" என்று ஏவினவர்கள் மேல் மிகுந்த கோபம் கொண்டது.

பூதங்கள் தமக்கு இடப்பட்ட தொழிலை முடிக்க முடியாமல் திரும்பும்படி நேரிட்டால், தம்மை அனுப்பினவர்களிடமே திரும்பிச் சென்று அவர்களைக் கொல்வது வழக்கம். அம்மாதிரியே அந்த பூதமும் உடனே திரும்பிப் போய் கனித்திரருடைய சகோதரர் எல்லோரையும் அடித்துக் கொன்றுவிட்டது.

கெடுவான் கேடு நினைப்பான்.

ஜெகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

# ரத்னக் குவியல்

## நுண்ணறிவுப் போட்டி - 64

குழந்தைகளின் பொது அறிவை வளர்ப்பதற்காக நடத்தப் பெறும் போட்டி இது. இதற்கு கட்டணமில்லை. ஒவ்வொரு செய்திக்கும் இரண்டு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் சரியான விடைகளை ஆராய்ந்து எழுதுபவர்கள் பரிசுக்குத் தகுதியுள்ளவர்கள். பலர் சரியான விடையை எழுதி இருந்தால் பரிசு பகிர்ந்து அளிக்கப்படும்.

**சரியான விடையை சிவப்பு மையினால் கீழே கோடிட்டுக் காட்டவேண்டும்.**

ரத்னபாலாவில் அச்சிட்ட கூப்பனில்தான் விடைகளை எழுதி அனுப்ப வேண்டும். வெற்றுத்தாளில் எழுதக் கூடாது. விடைகளை எழுதி, 'ரத்னபாலா' — நுண்ணறிவுப் போட்டி, 225, முண்டக நாடார் தெரு, தபால் பெட்டி எண் 17, சிவகாசி 626 123 என்ற முகவரிக்கு 15—4—1990க்குள் அனுப்பவேண்டும். நிர்வாகக் குழுவின் தீர்ப்பே முடிவானது.

**முதல் பரிசு : ரூ 200-00  இரண்டாவது பரிசு : ரூ 150-00**

---

ரத்னபாலா  நுண்ணறிவுப் போட்டி-64

பெயர் ____________________

முகவரி ____________________  பின் கோடு __________

# நுண்ணறிவுப் போட்டி - 64.

| | | |
|---|---|---|
| 1. | இந்தியாவின் ஒளிமயமான எதிர்காலம் இவர்கள் கையில் உள்ளது. | ஃ இளைஞர்கள் / வழிநடத்தும் முதியவர்கள் |
| 2. | கடல் நீரில் 200 மீட்டர் ஆழத்திற்கு மேல் சூரியஒளி ஊடுருவுவதில்லை என்பது...... | ஃ உண்மையல்ல / உண்மை |
| 3. | ஜீரணமாகாத உணவினால் இது தடைப்படும். | ஃ உறக்கம் / வயிற்றின் இயல்பான நடைமுறை |
| 4. | பாரதம் இப்போது இதை எதிர்த்துப் போராடுகிறது. | ஃ வறுமையை / தீவிரவாதத்தை |
| 5. | இந்தியாவில் மிக அதிகமான தோல் தொழிற் சாலைகள் இங்குதானுள்ளன. | ∴ தமிழ்நாட்டில் / உத்தரப்பிரதேசத்தில் |
| 6. | துறவிகளைப் பற்றி உலகம் என்ன நினைக்கிறது ? | ∴ அடக்கமேஉருவானவர்கள் ஆன்மீகக் கருத்துக்களை வாரி வழங்குபவர்கள். |
| 7. | மனிதன் மேற்கொள்ளும் ஆடம்பரம் ... | ∴ பணத்தால் வாழ்கிறது / குணத்தை அழிக்கிறது. |
| 8. | தொலைக்காட்சி குழந்தைகள் வாழ்வில் ..... | ∴ நேரத்தை பாதிக்கிறது / மனநிலையை பாதிக்கிறது. |
| 9. | பாரத் ரத்ன விருது இவருக்கு இறந்த பின் வழங்கப்கட்டது. | ∴ இந்திரா காந்தி / லால்பகதூர் சாஸ்திரி |
| 10. | அதிநுட்பமான சிற்பக்கலை......... ... . என்கிறார்கள். | ∴ மென்மையானது கடின உழைப்புகொண்டது |

# சிக்கும் சிறங்கள்

பொன் பரமகுரு

பண்டைக் காலத்தில் நமது அரசர் ஒருவர் வெகு சாமர்த்தியமாய் துப்பறிந்து திருடனைக் கண்டு பிடித்தாராம். ஒரு களவு சம்பந்தமாகச் சந்தேகித்தபத்து நபர்களை வரச் செய்தார். அவர்களிடம், "அடுத்த இருட்டறையில் ஒரு கழுதை கட்டியுள்ளது. நீங்கள் ஒவ்வொருவரும் அந்த அறைக்குள் சென்று கழுதையின் வாலை வலது கையால் பிடித்துவிட்டு வர வேண்டும். உங்களுள் குற்றவாளியானவர் அதன் வாலைப் பிடித்தால் அது உரக்கக் கத்தும், "என அறிவித்தார் அரசர். அவ்விதமே அவர்கள் ஒவ்வொருவராய் அந்த அறைக்குள் சென்று வந்தனர். ஆனால், கழுதை கத்தவே இல்லை. அரசர் அந்த பத்தும் பேரையும் தம் முன் நிற்கச் செய்து, அவர்களது வலது கையைக் காட்டச் சொன்னார். அவர்கள் அப்படியே காட்டினர். அவர்களுள் ஒன்பது பேரை போகச் சொல்லி விட்டுப் பத்தாவது நபரை மட்டும் கைது செய்ய கட்டளையிட்டார்.

கைதான அவனும் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டான். எவ்விதம் அரசரால் உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடிந்ததென அங்கிருந்த அனைவருக்கும் அதிசயமாயிருந்தது. அரசர் தம் மதிநுட்பத்தால் அந்தக் கழுதையின் வாலில் 'கறுப்பு மை' தடவ ஏற்பாடு செய்திருந்தார். குற்றஞ் செய்யாத அந்த ஒன்பது பேரும் தயங்காது கழுதையின் வாலைப் பிடித்தனர். அதனால் அவர்களது வலது கையில் கழுதையின் வாலில் தடவிய கறுப்பு மை



ஒட்டியிருந்தது. ஆனால், உண்மைக் குற்றவாளியான பத்தாம் நபர், தான் வாலைப் பிடித்தால் கழுதை கத்தி தன்னைக் காட்டிக் கொடுத்து விடுமோ என அஞ்சி அதன் வாலைப் பிடிக்காது வந்தான். அதனால் அவனது வலக்கை கறுப்பு மையின்றிச் சுத்தமாக இருந்தது. அவன் தன் செய்கை மூலம் தான் தான் குற்றவாளி என்பதை நிரூபித்தான்.

ஆனால், இத்தகைய முறையை காவலர் இந்த விஞ்ஞான காலத்தில் கையாளுதல் கடினம். எனவே, விஞ்ஞான முறைகள், ரசாயன ஆராய்ச்சி வசதிகள் உதவியால் காவலர் குற்றம் புரிவோரைக் கண்டுபிடிக்கின்றனர். தவிர, துப்பறியும் நாய், கைரேகை முதலியவற்றின் உதவியாலும் குற்றவாளியை இனங்கண்டு புலனாய்வில் வெற்றி பெறுகின்றனர்.

**பாதைப் பாதுகாப்பு:-** உந்து ஊர்தியால் பாதையில் துன்பம் நேர்வதை அடிக்கடி நாம் காண்கிறோம். அதனால் கணக்கில்லா மக்கள் காயப்படுகின்றனர். பலர் உயிரிழக்கின்றனர். அவை எதனால் நேர்ந்தன என்பதனைக் காவலர் ஆராய்கின்றனர். பாதை பழுதடைந்துள்ளதா, வாகனம் அதிவிரைவாக ஓட்டப்பட்டதா, பொறிகளில் கேடு ஏற்பட்டதாயெனப் பார்க்கின்றனர். வாகனம் ஓட்டியவரின் குற்றமா அல்லது குறுக்கே வந்தவரின் குற்றமா என்பதைக் கவனிக்கின்றனர். அதற்கேற்ப தக்க நடவடிக்கை காவலர் எடுக்கின்றனர். பாதைப் பாதுகாப்பு முறைகளைப் பற்றி பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் காவலர் பயிற்சி அளிக்கின்றனர். அதற்கேற்ப தக்க நடவடிக்கை காவலர் எடுக்கின்றனர். வேகத்திற்கு ஏற்றவாறு வாகனங்களைப் பிரித்தனுப்பச் சாலைகளில் கோடுகள் போடுகின்றனர். ஒரு வழிப் பாதைகளும், மாற்றுப் பாதைகளும் அமைக்கின்றனர். வாகனமுடையோரும், மற்றோரும் ஒத்துழைத்தால்தான் காவலர் தமது பாதைப்பாதுகாப்பு பணிகளைத் திறம்பட ஆற்றமுடியும்.

**புதுமைப் பணிகள்:** காவலர் சகல கலா வல்லவராய் விளங்க வேண்டியுள்ளது. மனிதச் செயல்கள், நடவடிக்கைகள் அனைத்தையும் கண்காணித்துப் பாதுகாக்கும் பொறுப்பு தற்போது காவலர் கடமையாக விளங்குகிறது. தொழிற்சாலைகள், ஏன் பத்திரிகை அலுவலகங்களைக் கூட இன்று காவலர் பாதுகாக்க வேண்டியுள்ளது. அது மட்டுமா? மாணவர் போராட்டக் காலத்தில் சுற்றிச் சூழப்பட்ட பல்கலைக் கழக துணை வேந்தர்கள், பரீட்சைக் கூடங்களை மேற்பார்க்கும் ஆசிரியர்கள், வறட்சியால் வாடும் மக்கள், கிணறுகளில் தவறி விழும் குழந்தைகள், வனவிலங்கால் - புயலால் - வெள்ளத்தால் - தீயால் - பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்கள், சில சமயங்களில் மகப்பேறு சிக்கலில் தவிக்கும் பெண்டிர் முதலானோரும் காவலர் உதவியையே நாடுகின்றனர். மற்றும் விசிறிகள், ரசிகர்கள் மத்தியில் சிக்கித் தவிக்கும் சினிமா நட்சத்திரங்களைக் காப்பதும் காவலர் கடமையாகிவிட்டது. ''இது எமது பணியல்ல'' என்று காவலர் எவ்விதக் கடமையையும் ஒதுக்க இயலாத நிலை இன்று ஏற்பட்டுள்ளது. காரணம், அரசும், மக்களும் கால ஓட்டத்தில் காவலரை அதிகமாக எதிர்பார்த்து நம்பியுள்ளனர்.

காவலரின் புதுமைப் பணிகளில் விலங்குகளுக்கு ஆற்றிய சுவையான கடமைகளும் உள்ளன. பொதுவாக சாலையில் திரிகிற கால் நடைகளை கட்டுப்படுத்தல், பயங்கரப் புலிகளை வேட்டையாடல், வெறிநாய்களை விரட்டுதல், திருடப்பட்ட செல்ல நாய்களைத் தேடிக் கண்டுபிடித்தல் ஆகியவைகளே இதுவரை காவலர் கடமையாக இருந்தன. ஆனால், 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சென்னையில் மாபெரும் மிருகம் ஒன்றைக் கட்டுப்படுத்தும் பணி காவலருக்கு ஏற்பட்டது. காஞ்சிபுரத்து யானை 'ஜானகி' சைதாப்பேட்டை ஐயப்பன் பூசைக்கு

அழைத்து வரப்பட்டது. தலைமை யானைப் பாகனுக்குப் பதில் உதவி மாவுத்தன் பொறுப்பில் அந்த யானை இருந்தது. அவன் சரிவர உணவளித்துப் பராமரிக்காததால் சினங்கொண்டு வெகுண்ட அந்த யானை சைதையினின்று ஓலமிட்டுக் கிளம்பி, அண்ணா சாலை வழியாகப் பவனி வந்து, எழும்பூர் கமாண்டர் இன் - சீவ் சாலையை அடைந்தது. அங்கே அட்டகாசம் புரிந்தது. மக்கள் பீதி அடைந்தனர். போக்குவரத்து தடைப்பட்டது. இதன் விவரம் காவல் வானொலி மூலம் அறிந்த ஐ.ஜி அந்த யானையைச் சுட உத்தரவிட்டார். அந்த ஆணையைக் கேட்ட கமிஷனரான நான், "யானையைச் சுடத் தேவையில்லை. நானே நேரில் சென்று கவனிக்கிறேன்." எனக்கூறி, அத்தலத்திற்கு விரைந்து சென்றேன். யானையின் வயிறு ஒட்டியிருந்த குறிப்பறிந்து சோற்றுக் கட்டி, கோரைப்புல், தென்னங்கீற்று, கரும்பு யாவும் வரவழைத்து அதற்கு அளித்து, அதன் பசி தீர்த்து சாந்தப்படுத்தினேன். பின்னர் காஞ்சிபுரத்திலிருந்து யானைப் பாகனை வரவழைத்து அவன் வசம் யானை ஜானகியை பத்திரமாய்க் காஞ்சிக்கு அனுப்பினேன்.

சென்னையைப் போலவே அருணாசலப் பிரதேசத்திலும் ஓர் அதிசய சம்பவம் நிகழ்ந்தது. அங்கே கும்பமேளா திருவிழா வெகு கோலாகலமாக நடந்த சமயம், ஒரு யானை மதம் பிடித்து அட்டகாசம் புரிந்தது. மக்கள் பீதியால் அவதியுற்றனர். எனவே, அந்த யானையையும் சுட்டுக் கொல்ல ஆணை பிறப்பிக்கப்பட்டது. குதிரைப் படைக்காவலர் திருவிழாத் தலத்திலிருந்து அந்த யானையை விரட்டிச் சென்று ஒரு மலை அடிவாரத்தினருகே மடக்கினர். யானையைச் சுட துப்பாக்கிப் படை காவலருக்காகக் காத்திருந்தனர். அது சமயம் அங்கே ஒரு சாது வந்தார். அங்கிருந்த நிலவரத்தை அறிந்த அவர், "அநியாயமாய் அந்த யானையைச் சுட்டுக் கொல்ல வேண்டாம். ஒரு ஒட்டகம் இருந்தால் கொண்டு வாருங்கள். நான் அந்த யானையை நொடிப் பொழுதில் அடக்குகிறேன்," என்றார். நல்ல காலமாய்



அருகாமையில் ஒரு சர்க்கஸ் குழு முகாமிட்டிருந்தது. அங்கிருந்த ஒட்டகம் ஒன்று அழைத்து வரப்பட்டது. உடனே அந்த சாது ஒட்டகத்தை யானையின் அருகே இட்டுச் சென்றார். என்ன ஆச்சரியம்! அந்த ஒட்டகத்தைக் கண்ட யானையும் அடங்கி சாந்தமுற்று, ஒரு ஆட்டுக்குட்டிப் போல் கட்டுப்பட்டு, அமைதியாய் நடந்து வந்தது. இதோர் அதிசயமே! ஆனால் உண்மை! அருணாசலப் பிரதேசக் காவலருக்கு இப்படி ஓர் புதுமைப் பணி அனுபவம்.

பொது நலத்தையும், பாதுகாப்பையும் பேணி அமைதிகாக்க இவ்விதப் புதுமைப் பணிகளும் புரிய வேண்டியது காவலர் கடமையாகும்.

**உங்கள் நண்பன்:** 1959 ஆம் ஆண்டு தமிழகக் காவல் துறையின் நூற்றாண்டு விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அது சமயம் நான் கதை வசனம் எழுதி நடித்து, 'உங்கள் நண்பன்' என்றோர் திரைப்படம் தயாரித்து, காவலர் பணியை விளக்கி மக்கள் தொடர்பையும், நல்லெண்ணத்தையும் பெரிதும் வளர்த்தோம். ஆம், காவலர் என்றென்றும் உங்கள் நண்பராய் இருந்து, அமைதிக்கும் ஒழுங்கிற்கும் அரணாக விளங்குவர். வன்முறைச் செயல்களிலிருந்து மக்களைக் காப்பர். சொத்திற்கும், சுகத்திற்கும் காவல் புரிவர். எவ்வித இடர் வரினும் சிறிதும் தளராது 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற இலட்சியத்துடன் சிறந்த சேவை செய்யச் சித்தமாயிருப்பர்.

காக்கி உடையும் காளை நடையும்
காவலர் தம் தனி உடைமை!
கடமை கண்ணியம் கட்டுப்பாடு
காப்பது
காக்கும் கரங்களின் பொது உடைமை!

✱



# ரத்ன பாலா

**நுண்ணறிவுப் போட்டி 62 பிப்ரவரி 1990 முடிவுகள்.**

**சரியான விடைகள்:** 1. உள்ளத்தால் வாழ்பவர் 2. எளிய வாழ்க்கை 3. பணம் 4. அன்பு 5. உண்மை 6 எல்லோரையும் கெட்டவர் எனவெறுப்பது 7. நல்லோர் நட்பு 8. மழை நீர் 9. எல்லோர்க்கும் நன்மை 10. பகைத்தல்.

10. விடைகளேயும் சரியாக எழுதிய கீழ்க்காணும் மூன்று பேர் முதற் பரிசின் பங்குத் தொகையாகத் தலா ரூ. 66 66 ஐப் பெறுகிருர்கள்.

**முகவரி விவரம்:** 1. சீ ஆனந்த் வெங்கடேசன், தேகமுஜிப் பேட்டை. தி. க. குன்றம் 603109.

2. ச. மஞ்சுளா, 149 மாடசாமி கோவில் மறவர் வடக்கு தெரு. ராசபாளையம்-626117. 3. வி. கவியரசி, 17. அரசினர் குடியிருப்பு, இலாசுப்பேட்டை புதுவை-605 009.

9 விடைகளே மட்டும் சரியாக எழுதிய கீழ்க்காணும் 24 பேர் இரண்டாம் பரிசின் பங்குத் தொகையாகத் தலா ரூ. 6-25 ஐப் பெறுகிருர்கள்.

1. R. கவிதா. D/o இராஜேஸ்வரி, நிலஅளவர், காந்தி நகர், தர்மபுரி 636 701. 2. சு. செல்வமுத்து, மடுவின்கரை, கிண்டி, சென்னே-32. 3. A. கதிர்வேல், 25 ஹைவேஸ் ரோடு, செட்டிபாளேயம், கோயமுத்தூர். 4. R. ராஜ்குமார் 50, D. P. F. St., P. N. பாளேயம், கோவை-37. 5. சொ. வைரவன், 150 தேரு வீதி, ராம் நகர், கோவை-641 009. 6. K. செல்வராணி, 41 /2 கிருஷ்ணராஜபுரம் 6 ஆம் எண் தெரு, தூத்துக்குடி-2. 7. J. சரவணக்குமார், P. ஜெயபால் எண்-14 தனலெட்சுமி தியேட்டர் பின்புறம்-திருப்பூர். 8. JANO, D/o Mrs. SORNAM, MADURANAYAGAM HOUSE BOYS COMPANY ARUVANKADU NILGIRIS 9. ஸ்ரீதேவி III ஆம் வகுப்பு அக்கச்சிப்பட்டி தெளிவான முகவரி இல்லே. 10. இரா. வசந்தி, வயலிசுப்பலாபுரம் P. O. (VIA) கரிவலம் வந்தநல்லூர். 11. S. கருப்பசாமி S/o செல்லக்கனி நாடார், புதுச்சூரங்குடி P.O. 12. கே. கவிதா 8 ஆம் வகுப்பு அ. உ. நிலேப்பள்ளி, கோவிலூர் P. O. 13. R. சுபத்ரா பிரியதர்சினி, ரிசர்ச்பாரஸ்டர்தெரு, சோழபுரம் (P. O.) 14. தி. சுந்தரராஜன், 127, வடக்குத்தெரு, துறையூர். 15. சௌ. ராமகிருஷ்ணன் 58-A. அண்ணுசாலே, திருவண்ணுமலே. 16. சு. ராமலட்சுமி 49/3 1 புல்லாலக்கோட்டை ரோடு. விருதுநகர். 17. L. விஜயகுமார்முரளி, A. 260 T. F. I. அரசு ஆதார நிலேயம் மெய்ஞானபுரம் 18. P. ராஜசுந்தரம் 2, ஜீவ ரத்னம்மாள் தெரு, திருவேற்காடு சென்னே-77. 19. T.பரமேஸ்வரி D/o R. ஜெகநாதன், மேட்டூர் அணே. 20. H. சங்கீதா, வீட்டுவசதி வாரியக்குடியிருப்பு கோவை-44 21. K. வெங்கடாசலம் IX Std A. அரசு மேல்நிலேப்பள்ளி ஆட்டையாம்பட்டி சேலம் Dst. 22. ஜி. துரைமுருகன், சிவப்பிரகாச ஸ்கூல் தச்சநல்லூர். 23. எஸ். லதா, 6-2-9/3-காகாஜி காலனி, ஹமைகொண்டாவாரங்கல். 24. நா. கோகுல்நாத்யாதவ். கொண்டப்பநாயக்கன்பாளேயம் தெரு, பட்டுக்கோட்டை.

டாக்டர் கு.கணேசன்

# நிணநீர்

அன்புள்ள கண்ணா!

நீ நலமா? முழு ஆண்டுத் தேர்வுகள் நெருங்குகின்றனவே! நன்கு படிக்கிறாயா? சென்ற வாரம் நீ எழுதியிருந்த கடிதம் இன்று தான் எனக்குக் கிடைத்தது. பள்ளிச் சிறுவர்களுக்கான அறிவியல் 'க்விஸ்' போட்டியில் உனக்கு இரண்டாம் பரிசு கிடைத்திருப்பதாக எழுதியிருந்தாய். வாழ்த்துக்கள்! அடுத்தப் போட்டியில் உனக்கே முதல் பரிசு கிடைக்க என் அட்வான்ஸ் ஆசிகள்.

நீ கலந்து கொண்ட அப்போட்டியில் 'நிணநீர் என்றால் என்ன?' என்று கேட்டதாகவும் அது பற்றி உனக்குத் தெரியாத காரணத்தால் மௌனம் சாதித்ததாகவும் வருத்தப்பட்டு எழுதியுள்ளாய்.

உனக்குத் தெரியாத விசயங்களைச் சொல்லித் தரத்தான் இந்த மாமா இருக்கிறேனே! கவலையை விடு. கடிதத்தைப் படி.

நம் உடம்பில் இரத்தத்தை எடுத்துச் செல்வதற்காக இரத்த ஓட்ட மண்டலம் என்று ஒரு மண்டலம் இருக்கிறதல்லவா? அம்மாதிரியே நிணநீரை எடுத்துச் செல்வதற்கு நிணநீர் மண்டலம் என்று தனியாக ஒரு மண்டலம் இருக்கிறது. இதில் நிணநீர், நிணநீர் நாளங்கள், நிணநீர் முடிச்சுக்கள் ஆகியவை அடங்கும்.

இதில் நிணநீர் என்பது இரத்தத்திலிருந்து உருவாகிற ஒரு நிறமற்ற திரவமாகும். இதனை ஆங்கிலத்தில் 'லிம்ப்' (LYMPH) என்று அழைப்பார்கள். நிணநீர் பார்ப்பதற்கு இரத்த பிளாஸ்மாவைப் போன்று இருக்கும். நிணநீரில் புரதச் சத்துக்கள், கொழுப்புச் சத்துகள்கள், கால்சியம், குளோரைடு, பாஸ்பரஸ், யூரியா, கிரியேட்டினின் போன்ற இராசாயனப் பொருட்களும், நோய்க் கிருமிகளை எதிர்த்துப் போராடும் சக்தி வாய்ந்த 'லிம்போசைட்டுகள்' எனப்படும் ஒரு வகை வெள்ளையணுக்களும் அடங்கியிருக்கும்.

இந்த நிணநீர் எங்கு, எப்படி உண்டாகிறது என்பதை உனக்குச் சொல்லட்டுமா?

இரத்தத் தந்துகிகள் மூலம் இரத்தம் நம் உடல் திசுக்களை வந்தடையும் போது, இரத்தத்திலிருந்து பிராணவாயும், சத்துப் பொருட்களும் திசுக்களுக்குச் செல்வதும், திசுக்களில் உண்டாகும் கழிவுப் பொருட்கள் இரத்தத்தில் கலப்பதும் உனக்கு ஏற்கனவே தெரிந்த செய்தி தானே!

மேற்சொன்ன நிகழ்ச்சி உடல் திசுக்களில் நடக்கும் போது, திசுக்களில் உண்டாகும் சில கழிவுப் பொருட்களும் சத்துக்களும் இரத்தத்தில் கலக்காமல் நிணநீர் நாளங்களில் கலந்து விடும். இது தான் 'நிணநீர்' என்பது. இந்த நிணநீர் நாளம் எப்படியிருக்கும் தெரியுமா? சிரை இரத்தக் குழாய்களைப் போலவே நிணநீர் நாளங்களும் இருக்கும். ஆனால் அளவில் மிகமிகச் சிறியவைகளாக இருக்கும். பல சிறிய நிணநீர் நாளங்கள் ஒன்று சேர்ந்து ஒரு

வலைப் பின்னலைப் போல அமைந்திருக்கும். பின்பு அது பெரிய நிணநீர் நாளமாக மாறும்.

ஒவ்வொரு நிணநீர் நாளத்திலும் வால்வுகள் உண்டு. இவ்வால்வுகள் சுருங்கும் போதும், நிணநீர் நாளத்தைச் சுற்றியிருக்கும் திசுக்கள் சுருங்கும் போதும் நிணநீர் உந்தித் தள்ளப்பட்டு, நிணநீர் நாளம் வழியாக உடம்பின் மற்ற பாகங்களுக்கு எடுத்துச் செல்லப் படும். இதை 'நிணநீர் ஓட்டம்' என்று அழைக்கிறார்கள்.

இரத்த ஓட்டத்திற்கும் நிணநீர் ஓட்டத்திற்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. அது என்ன தெரியுமா, கண்ணா?

இரத்த ஓட்டத்தில் இரத்தம், உடல் திசுக்களுக்கு உள்ளேயும், வெளியேயும் சென்று வரும். ஆனால் நிணநீர் ஓட்டத்தில் நிணநீர் திசுக்களுக்கு உள்ளே செல்வதில்லை! திசுக்களிலிருந்து வெளியே மட்டுமே வரக்கூடிய ஒரு திசைப் பயணமாக நிணநீர் ஓடுகிறது.

நம் உடம்பில் நரம்பு மண்டலம் தவிர மற்ற எல்லா உறுப்புகளிலிருந்தும் நிணநீர் உருவாகிறது. தோல், கால், தொடை, வயிறு, குடல், இரைப்பை, கல்லீரல், நுரையீரல், இதயம், கழுத்து, தலை, முகம் ஆகிய எல்லா பகுதிகளிலிருந்துமே நிணநீர் உண்டாகிறது. இவ்வாறு உண்டான நிணநீர் மார்பு நிணநீர் நாளம், வலது நிணநீர் நாளம் என்ற இரு பெரும் நிணநீர் நாளங்களில் சேருகிறது.

நிணநீர் மண்டலம் இரத்த சிரை மண்டலத்திற்கு துணை நிற்கிறது. எப்படி? இரத்த சிரைகளில் சேர வேண்டிய கழிவுப் பொருட்களையும் சில சத்துப் பொருட்களையும் நிணநீர் தான் எடுத்துக் கொண்டு உடம்பின் பல பகுதிகளுக்கு எடுத்துச் செல்கிறது? அதனால்தான் நிணநீர் ஓட்டத்தை இரத்த ஓட்டத்திற்குத் துணை நிற்கிறது என்று சொல்கிறார்கள்?

நிணநீரில் இருக்கும் 'லிம்போசைட்டுகள்' எனப்படும் வெள்ளையணுக்கள் நோய்க் கிருமிகளை எதிர்த்துப் போராடும் சக்தி வாய்ந்தவை. நம் உடம்பினுள் பேக்டீரியாவோ, வைரஸ் கிருமிகளோ நுழைந்து விட்டால், இந்த லிம்போசைட்டுகள் படை போல் திரண்டு வந்து அக்கிருமிகளுடன் போராடி நம்மை நோயிலிருந்து காப்பாற்றும்!

அத்தோடு நிணநீர் இரத்தத்திலிருந்து திசுக்களுக்கு சத்துக்களை கிரகித்துக் கொடுப்பதிலும் பங்கு வகிக்கிறது.

சரி! நிணநீர் முடிச்சுக்கள் என்பவை எவை? அதைப் பற்றியும் உனக்குச் சில வரிகள் எழுதுகிறேன்.

நிணநீர் முடிச்சுக்கள் என்பவை இணைப்புத் திசுக்களால் ஆன, உருண்டையான சிறு சிறு முடிச்சுக்களாகும். இவை நிணநீர் நாளங்கள் செல்லும் பாதையில் இருக்கும். உடம்பில் ஒரு பகுதியில் வெளியாகும் நிணநீர் குறிப்பிட்ட நிணநீர் முடிச்சினுள் செல்லும்.

உதாரணமாக கால்களில் வெளியாகும் நிணநீர் தொடையிடுக்கில் இருக்கும் நிணநீர் முடிச்சில் செல்லும். கைகளில் வெளியாகும் நிணநீர் அக்குளில் இருக்கும் முடிச்சில் செல்லும். தொடையில் வெளியாகும் நிணநீர் கழுத்துப் பகுதியிலிருக்கும் நிணநீர் முடிச்சில் செல்லும். இவ்வாறு குறிப்பிட்ட ஒரு உறுப்புக்கு ஒரு குறிப்பிட்ட நிணநீர் முடிச்சு உண்டு.

இந்த நிணநீர் முடிச்சின் பணி என்ன?

நம் இரத்தத்தை உற்பத்தி செய்வதில் நிணநீர் முடிச்சுக்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. லிம்போசைட்டுகளை உற்பத்தி செய்வதும் நிணநீர் முடிச்சுக்களே! அதுமட்டுமில்லாமல் நோய்க் கிருமிகள் குறிப்பிட்ட உறுப்பினுள் நுழையும் போது அவ்வுறுப்புக்கு உண்டான நிணநீர் முடிச்சு அளவில் பெரிதாக வீங்கி நோயினை நாம் அறியச் செய்யவும் உதவுகிறது.

கண்ணா, நம் உடம்பில் 'நெறி' கட்டுவதைக் கேள்விப்பட்டிருக்கிறாயா? காலில் புண் வந்தால் தொடையில் நெறிகட்டுவதும், கையில் புண் வந்தால் அக்குளில் நெறிகட்டுவதும் உனக்குத் தெரிந்திருக்குமே! இந்த நெறி என்பது வேறொன்றுமில்லை! அளவில் பெரிதாக வீங்கிய நிணநீர் முடிச்சுக்களைத்தான் நாம் 'நெறிக்கட்டி' என்று அழைக்கிறோம்.

அடுத்ததாக உனக்கு ஒரு போனஸ் செய்தி.

யானைக்கால் வியாதியில் கால்கள் யானைக்கால் போல பெரிதாக வீங்கிக் கொள்கின்றனவே... அது ஏன் தெரியுமா, நம் கால் பாதங்களில் ஆரம்பிக்கும் நிணநீர் நாளங்கள் யானைக்கால் வியாதியில் அடைபட்டுப் போவதால் பாதங்களிலும் கால்களிலம் நிணநீர் அதிகமாகத் தேங்கி விடுகிறது. இதனால் கால்கள் வீங்கிக் கொள்கின்றன. அது பார்ப்பதற்கு யானைக் கால்களைப் போன்று இருக்கிறது. உடனே அவ்வியாதிக்கு 'யானைக் கால் வியாதி' என்று பெயர் வைத்து விட்டார்கள்.

சரி கண்ணா, நிணநீர் பற்றிய இத்தனை செய்திகள் உனக்குப் போதும் என நினைக்கிறேன்.

மீண்டும் அடுத்த கடிதத்தில் சந்திப்போம்.

குட்பை!

பிரியமுடன்,
உன் டாக்டர் மாமா.






# உவமம்

துரையரசு

சந்திரன் ஆறாம் வகுப்பு மாண வன். அவனிடம் ஒரு கெட்டப் பழக் கம். யாரைக் கண்டாலும் ஏதாவது ஒரு குறையைக் கண்டு பிடிப்பான். அதனைப் பெரிது படுத்திப் பேசுவான்.

எடுத்துக்காட்டாக-

சப்பை மூக்கன்.....

கிளி மூக்கன்.....

ஆந்தைக் கண்ணன்....

குட்டப்பன்.....

நெட்டப்பன்....

காக்கா......

இவ்விதம் பேசுவதால் பல மாண வர்கள் அவனை வெறுத்தனர்.

அவனைப் 'பன்றி' என அழைத்த னர். ஏனெனில் எத்தனையோ தெளிந்த நீரோடைகள் இருக்கலாம். ஆனால் சாக்கடையைத் தானே பன்றி பார்க்கும். தெரிந்தெடுக்கும். விரும்பி விளையாடும்.

வகுப்பாசிரியருக்கும் வேதனை. சந் திரனை எப்படித் திருத்துவது? யோசித்தார்.

ஒரு நாள்-

சந்திரனை அழைத்தார். ஒரு பூங்கா வினுள் அழைத்துச் சென்றார்.

அங்கே-

அழகிய வண்ண மலர்கள்.

நறுமணம் வீசும் நல்ல பூக்கள்.

எத்தனை வித ரோஜாச் செடிகள்!

ஒரு சிவப்பு ரோஜாச் செடி-

அதில் ஏராளமான மலர்கள். அவை செவ்விதழ்களை விரித்து புன்னகைத் தன.

அதனருகில்-

சந்திரன் - ஆசிரியர்!



ஆசிரியர், சந்திரனை அன்போடு அழைத்தார். அத்துடன்,

''சந்திரா! இதோ பார்! இந்தச் செடியில் என்ன பார்க்கிறாய்?'' என்று வினவினார்.

''ஐயா! அழகிய ரோஜா மலர்களைப் பார்க்கிறேன்'' என்றான் பதிலாக.

''உண்மையாகவா?'' என்று கேட்டார்.

''ஆமாம் ஐயா! அழகிய சிவப்பு ரோஜாப் பூக்கள்தான் பூத்திருக்கின்றன'' என்றான் சந்திரன்.

சிறிது நேர அமைதி.

பின்பு ஆசிரியர் பேசலானார்.

''சந்திரன்! நீ சொன்னது சரிதான். ஆனால் அந்த ரோஜாச் செடியில் முட்கள் இருக்கின்றன. இலைகள் இருக்கின்றன. கிளைகள் கூட உள்ளன.....''

''உனக்குச் செடியிலுள்ள நல்லவை தான் கண்ணுக்குத் தெரிஞ்சிருக்கு. குத்தும் முட்கள் தெரியலே. பச்சை இலைகளும் தெரியலே....''

''நம் கண்ணுக்கு அழகிய மலர்கள் தான் தெரிகின்றன அல்லவா? அதபோல எவரிடமும் நல்லவைகளைத் தான் பார்க்கணும்....''

''தீயவைகளையோ அல்லது தவறானவைகளையோ அல்லது குறைகளையோ பார்க்கக் கூடாது:....''

''நீ உன்னுடன் படிக்கும் மாணவர்களிடமுள்ள குறைகளைத் தானே பார்க்கிறாய்.....? இது தவறு அல்லவா?''

ஆசிரியர் நிறுத்தினார்.

சந்திரன் சிந்தித்தான்.

கடைசியாக-

''ஐயா! எனக்கு இன்று பெரிய பாடமே படிச்சி தந்திட்டீங்க. ஒவ்வொருவரிடமும் இனி நல்லதையே பார்ப்பேன். எவரையுமே குறைகூற மாட்டேன்.'' என்றான் சந்திரன்.

ஆசிரியரின் முகம் மலர்ந்தது!

✱

---

# நல்ல ஐடியா!

குழந்தை எப்படி விளங்கும் என்பதை கணிக்க மத்திய மேற்கு அமெரிக்க நாட்டில் ஒரு பழக்கம் உள்ளது.

அந்நாட்டு மக்கள் குழந்தைக்கு ஒரு வயதானதும், ஒரு ரூமிற்குள் விடுகிறார்கள். அங்கே பைபிள், ஆப்பிள், டாலர் நோட் ஆகிய மூன்று பொருட்களை வைத்திருப்பர். குழந்தை என்ன செய்கிறது என்பதை மறைவாக நின்று கவனிப்பார்கள்.




அந்தக் குழந்தை ஆப்பிளை எடுத்தால் அவன் விவசாயி ஆவான். பைபிளைத் தொட்டால் மத போதகர் ஆவான். டாலர் நோட்டை எடுத்துக் கொண்டால் வியாபாரியாவான் என்று தீர்மானிக்கிறார்கள்.

ஆனால், அது பைபிளின் மேல் உட்கார்ந்து ஆப்பிளைத் தின்றபடி, டாலர் நோட்டையும் கையில் பிடித்துக் கொண்டால் அரசியல்வாதியாம்.

நல்ல ஐடியாதான்!

தேவநாதன்.

# வசதிக்கேற்ற சுகம்

சித்ரா கிருஷ்ணகுமார்



ராயரும் அவருடைய மதியூகி மந்திரி அப்பாஜியும் சமீபத்தில் பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தினை நேரில் காணும் பொருட்டு குதிரையேறிச் சென்று கொண்டிருந் தார்கள். ஆற்றங்கரையோரத்தில் மாடு மேய்க்கும் இளைஞன் ஒருவன் மாடுக ளைப் புல்வெளியில் மேய விட்டு விட்டு ஓடுகின்ற மழை நீரில் தலைக்

குக் கீழே ஒரு கல்லும் இடுப்புக்குக் கீழே ஒரு கல்லும், கால்களுக்குக் கீழ் ஒரு கல்லும் இருக்கும்படி வைத்து அதன் மேல் சம்பங் குடைகளைக் கொண்டு மூடி அதன்மேல் ஆனந்தமாகத் தூங்கிக் கொண்டிருந்தான். அவனுடைய தலை மயிரோ மழை நீரில் நனைந்து கொண்டிருந்தது.

அதைக் கண்டு ஆச்சரியமடைந்த அரசர் "அப்பாஜி இப்படிக் கூட ஒருவன் சுகமாகத் தூங்க முடியுமா? நமக்கோ மழைக்காலம் வந்தாலே குளிரும், ஜன்னியும் வந்து விடுகிறது. மாடு மேய்ப்பவனோ மழை நீரில் நனைந்தபடி சுகமாகத் தூங்குகிறானே!" என்று கூறினார்.

அதற்கு அப்பாஜி, "வசதிக்கேற்ற சுகம்! உணவுக்கேற்ற உடல் அமைப்பு! உடல் அமைப்புக்கேற்ற குணம். இதுவே உலக இயற்கை. மாடுமேய்ப்பவனுக்கும் மாளிகை சுகம் கிடைத்தால் அவனும் நம்மைப் போல் ஆகிவிடுவான். அவனுடைய உடலில் காற்றும், மழையும் பனியும் படாமல் சிலகாலம் இருந்தால், இவனுக்கும் குளிர், ஜன்னி, ஜலதோஷம் பிடிக்கத்தான் செய்யும்" என்று கூறினார்.

இதனைச் சோதிக்க விரும்பிய அரசர் அந்த மாடு மேய்ப்பவனுக்கு அரண்மனையில் வேலை போட்டுக் கொடுத்துச் சுகமாக இருக்கச் செய்துவிட்டு, சிலகாலம் கழித்து அவனை அவனுடைய குடிசைக்கே செல்லும்படி செய்துவிட்டார்.

மாடு மேய்ப்பவன் தன் குடிசைக்குள் நுழையும் போது, அப்பாஜியின் அறிவுரைப்படி வாசலில் பச்சை வாழை மட்டைகள் போடப்பட்டிருந்தன. அவற்றை மிதித்துச் சென்ற மாடு மேய்ப்பவனுக்குக் குளிர் தாக்கி ஜலதோஷமும், காய்ச்சலும் வந்து விட்டது. அப்பாஜி கூறியது உண்மையே என்றறிந்த அரசர் மருத்துவர்களை அனுப்பி மாடு மேய்ப்பவனுக்கு மருந்து கொடுக்கச் செய்தார்.

* * *

## பொன்மொழித் திரட்டு!

விற்பவனுக்கு ஒரு கண் போதும். வாங்குபவனுக்கு நூறு கண் வேண்டும்.
-டச்சுப் பழமொழி

நல்லது போனால் தெரியும் கெட்டது வந்தால் தெரியும்.
-இத்தாலிப் பழமொழி

முயற்சி இல்லாத இடத்தில் எதுவும் விளங்குவதில்லை.

சோம்பேறித் தனமாய் இருப்பது தற்கொலைக்கு ஒப்பாகும்.
-செஸ்டர்பீல்டு

பழமொழிகள் இருட்டில் வழிகாட்டும் தீவர்த்திகள்
-ஸ்பானிஸ் பழமொழி

கர்வம் கொண்டவனைக் கண்டு வெற்றி விலகிவிடுகிறது.
-யெனிக்லான்

தேனி முருகேசன்

# YBF ஜெட் 767

கதை:- மணிமேகலா
படம்:- எஸ்.எஸ். மணியன்.




இப்ப என்ன சொல்லுறே
ப்ளீஸ்... என்னை சுட்டுடா--தீங்க.
ஜெட் எங்கே இறங்கப் போகுது
லிப்ளி நகரத்தில்
அப்படியா! மிஸ்டர் எக்ஸ்... ஓய்..... இசர்ட்.... கமான். ஜெட்டை தரையில் இறங்க விடாதீர் கள்.
எஸ் கேப்டன்
எஸ் கேப்டன்
எஸ் கேப்டன்


மேடம்! நாங்க விமானத்தைக் கடத்தப்போகிறோம்
ஓ.. காட். எங்களை காப்பாற்று
யே! அல்லா
முருகா
ஓ'மை' காட்
ஹலோ.. பைலட்.. ஜெட் தரையில் இறங்கினால்
உங்கள் உடலை... எங்களது புல்லட்டுகள் சல்லடையாக்கி விடும்.
என் தாய்க்கு இருதய ஆபரேஷன். லிப்பி நகரில் எங்களை இறக்கி விடுங்கள்
ஆபரேஷனா அதோ! முன்சீட்டில் தூங்கும் கனவான் தனை கேட்டு சொல்கிறேன்


ஹலோ ஹலோ
ஏய்! யார் நீ?. அவர்கள் யாருன்னு உனக்கு... ...
தெரியும் ஆனால் நான் யாரென்று உனக்கு தெரியாது. இந்த ஜெட் ஷிப்ளி காடுகளை நோக்கி கடத்தப் பட்டுக் கொண்டிருக்கிறது.
உன்னை என்ன செய்கிறேன் பார்?...
அம்மா!
நமது வழியில் யார் குறுக்கிட்டாலும் அவர்களின் கதி! அதோ கதி.


யார் நீங்க? உங்களுக்கு என்ன வேண்டும்.
அப்படி வாங்க வழிக்கு உங்க பிரதமருடன் உடனே பேசவேண்டும்.
என்ன விஷயம் எங்களிடம் சொல்லுங்கள்
தயவு செய்து சீக்கிரம் சொல்லுங்கள்
இன்று இரவுக்குள் பிரதமருடன் நான் பேச வேண்டும். முடியவில்லை என்றால் விமானத்தை லிப்னி காட்டுப்பகுதியில் இறக்கிவிட்டு உங்கள் எல்லோரையும் எமலோகத்திற்கு அனுப்பி விடுவேன்.
ஒன்றும் செய்ய வேண்டாம் இதோ! உடனே!



மிஸ்டர் "X" அண்ட் மிஸ்டர் Y. பயணிகளை கவனியுங்கள். மிஸ்டர் "Z" பைலட் அருகே காவல் இருங்கள். நான் பிரதமருடன் பேசுகிறேன். ஓ.கே!
எஸ் ஓகே.
உங்களிடம் உள்ள நகை, பணம் எல்லாவற்றையும் எடுங்கள்
ஹலோ, கண்ட்ரோல் ரூம் YBF ஜெட் 767 பைலட் பேசுகிறேன்
உங்கள் விமானம் தடம் மாறிச் செல்கிறது.
உங்களுடன் அமைச்சர் பேசவேண்டும் என்கிறார்.
ஏன் விமானம் எங்கே செல்கிறது!
நாங்கள் இக்கட்டான...
என்ன உளறல்? அதிகப்படியான வார்த்தைகள் அவசியமில்லை! உடனே பிரதமரைப் பேசச் சொல்லுங்கள்.


இரவு நேரம் தூங்க போயிருப் - பாரே
நான் விழித்திருக்கி - றேனே
ஹலோ! கண்ட்ரோல் ரூம் நான் YBF ஜெட் 767 லிருந்து அமைச்சர் பேசுகிறேன். ஜெட் கடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.
ஓ. காட்! என்ன ஜெட் கடத்தலா! என்ன விஷயம்?
நாஸா
தீவிரவாதிகளின் கேப்டன் பிரதமரிடம் உடனே பேச வேண்டுமாம். தயவு செய்து பேச உடனே தொடர்பு ஏற்படுத்துங் - கள்.
என்னது இது
குழந்தைகள் பசியால் துடிக்குது. அதுதான்.... ....
முதலில் பிரதமர் பேசட்டும் அப்புறம் உணவு கொடுக்கலாம்! திரும்ப போங்க.


ஹலோ!. பிரதமர் பேசுகிறார்கள்
பிரதமர் பேசுகிறார் என்ன சொல்ல வேண்டும்.
அதை நானே சொல்கிறேன். போனை என்னிடம் கொடு.
ஹலோ! பேசுறது
நான் தான் பிரதமர் பேசுகிறேன் உனக்கு என்ன வேண்டும்
நான் ஜெர்மன் நாசா தீவிரவாதி-களின் கேப்டன். எங்கள் கூட்டத்தைச் சேர்ந்த 4 பேர்கள் கைது செய்யப் பட்டு பெர்லின் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள் அவர்களை உடனே விடுவிக்க வேண்டும்.
உடனே அதிகாரிகளை அழைத்து அவர்களை விடுவிக்க சொல் கிறேன். அதற்குள் .... .... ....
ஒன்றும் செய்யமாட்டேன்


பெர்லினில் கொள்ளை அடித்தவா களை-யா
நாஸா தீவிரவாதிகளை உடனே விடுதலை செய்ய வேண்டும்.
வெளியே விட்டால் தொல்லை-கள் மேலும் மேலும் பெருகும்.
இப்ப... உடனே விடுதலை செய்யாவிட்டால் நம் அமைச்சர் 4பேர் களையும், YBF ஜெட்டில் உள்ள பிரயாணி-களையும் நாம் இழப்போம். உடனே நம் நாட்டு மக்கள் நம் அரசாங்கத்தை குறைகூறுவார்-கள்...


சார்! முதலில் அடைபட்டுள்ள தீவிரவாதிகளை விடுதலை செய்து நம் மக்களை காப்பாற்-றுங்கள்.
சார். அவசரப்பட்டு நம் கேப்டன் மார்ட்டினின் பேச்சைக் கேட்டு விடுதலை செய்தால் நம் உயிருக்கே ஆபத்து நேரிடலாம்.


ஒரு சிறு தவறும் ஏற்படாது. நான் அவர்களை எங்கே எப்படி ஒப்படைக்க வேண்டும்.
புத்தி சாலி யான கேள்வி. கவனமாகக் கேள். கிப்ளிங்கர் விமான நிலையத்திற்கு எங்கள் ஆட்கள் நான்கு பேர் மட்டுமே... வரவேண்டும். மேலும் வரும்போது அவர்கள் மற்றவர்களுக்கு அடையாளம் தெரியாதபடி முகமூடி அணிந்து ஒரு திறந்த ஜீப்பில் வரவேண்டும்.
ஓ கே! கேப்டன். இன்னும் இரண்டு மணிக்குள் அவர்களை அனுப்பி வைக்கிறேன்.
மார்ட்டின் துரித நடவடிக்கை மேற்கொண்டார். தன் காவல் படையில் உள்ள திறமைசாலியான மூன்று பேர்களை மட்டும் அழைத்துக் கொண்டு— தீவிர வாதிகள் அடைபட்ட சிறைச்சாலையை நோக்கி புறப்பட்டார்.


கேப்டன் மார்ட்டின்! நான் உங்களை நம்புகிறேன் எனக்கு-பிரயாணிகளை எப்படியும் காப்பாற்ற வேண்டும். அதற்கான முழு அதிகாரங்களை யும் உங்களிடம் ஒப்படைக்கிறேன். உடனே நடவடிக்கை எடுங்கள்.
சார் ஒன்றுக்கும் கவலைப்படாதீர் கள். என் உயிரைக் கொடுத்தாகிலும் அவர்களை காப்பாற்றியே தீருவேன்.
ஹலோ! நாஸா கேப்டன்!
இது பிரதமர் குரல் இல்லையே! யார் நீ?
நான் கேப்டன் மார்ட்டின். உங்கள் ஆட்கள் 4 பேர்களை யும் விடுதலை செய்கிறோம்.
நல்லது! மார்ட்டின் இடையில் ஏதாவது பிரச்சனை வந்தால் YBF ஜெட் 767 தூள்... தூளாக்கப்படும். ஞாபகம் இருக்கட்டும் கேப்டன்.


உங்கள் 4 பேரையும் நாஸா கேப்டன் கேட்டுக் கொண்டபடி பிரதமா விடுதலை செய்கிறார்
நாஸாவின் வலிமை உனக்கும், உங்கள் பிதமருக்கும் இப்போதாவது தெரிந்ததா?
இதென்னது! இந்த முகமூடி களை... ...
உங்கள் கேப்டனின் உத்தரவு. இந்த முகமூடி களை அணிந்துதான் செல்லவேண்டும். மேலும் நீங்கள் மட்டும் தனியாக ஒரு ஜீப்பில் ஜிப்ஸி நகரம் செல்ல வேண்டும்.
ம்... எங்கள் கேப்டன் விமானத்தில் "ஸ்பாட்" வைத்து விட்டாரா! அதுதான் இங்கு அலறி அடித்துக் கொண்டு எங்களை விடுவிக்கிறீங்களா.... ம். கொடு முகமூடியை.


ஒரு சின்ன வேண்டுகோள் இனிமேலும் நம் இரண்டு அணிகளுக்கும் விரோதம் வேண்டாம். அதன் அடிப்படை-யில் விடுதலை யாகும் உங்களுக்கு நட்பின் அடையாளமாக சிறப்பான விருந்து கொடுத்து அனுப்புமாறு எங்கள் பிரதமர் கூறியுள்ளார். அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என உங்கள் கேப்டனும் கூறி-யுள்ளார்.
உண்மையாகவா. எங்கள் கேப்டன் எதைச் செய்தாலும் காரணம் இல்லாமல் செய்யமாட்டார்.
விருந்துக்கு பின்...
அதோ நீங்கள் செல்ல வேண்டிய ஜீப் தயாராக உள்ளது. நீங்களே அதை ஓட்டிக் கொண்டு செல்லலாம். நாங்கள் இருவரும் உங்கள் கூட வரக்கூடாது.
எங்கள் கேப்டன், ஞானி வேறு யாருக்கும் வராது. உங்கள் விருந்துக்கு மிக்க நன்றி! நாங்கள் வரட்டு-மா!
தனியாக நீங்கள் செல்வதால் ஜிப்ஸி நகர எல்லையில் ஒரு செக்போஸ்ட் வரும்.
செக்போஸ்ட்டா! அவர்கள் தடுத்தால்
கவலைப்படாதீர்கள். அவர்கள் உங்களை விடச்சொல்லி பிரதமர் உத்தரவு இது. உடனே தடை செய்யாமல் விட்டு வார்கள். நான் வரட்டுமா


வண்டியில் வயர்லஸ் இருக்கிறது
உங்கள் பிரதமருக்கு எங்களின் வாழ்த்துக்கள்
உங்களுக்கும் சேர்த்து தான்.
சென்று வாருங்கள் உங்களுக்கும் உங்கள் கேப்டனுக்கும் எங்களின் வாழ்த்துக்கள்.
கில்பர்ட் - உடனே வண்டியை எடு. நாஸாக்கள் ஜீப் செக்போஸ்ட் போகும் முன் நாம் அங்கு போக வேண்டும். பக்கவாட்டு ஜன்னல் கதவுகளை மூடி விடுங்கள். போகும் போதே என் திட்டத்தை கூறுகிறேன்.
மார்ட்டின் கார் இருட்டைக் கிழித்துக் கொண்டு வேகமாக நாஸாக்கள் செல்லும் ஜீப்பை முந்தி சென்றது.
ம் சீக்கிரம் போ
பாவம் மார்ட்டின் பயந்தே போய் விட்டான்
ஹலோ! ஜீப்பில் வருவது
நாங்கள் தான் கேப்டன். நாங்கள் பத்திரமாக இன்னும் ௨௦ நிமிடத்தில் அங்கு வந்து விடுவோம்.
வெல்கம்! கடைசி வரை உஷாராக இருங்கள் மார்ட்டின் ஒரு கில்லாடி


பாஸ்! கேப்டன் நமது நட்பை நாடி விருந்து எல்லாம் கொடுத்தார்கள்
அதோ செக்போஸ்ட்
இதோ அனுமதி. திறந்து விடு.
வேண்டாங்க எங்க கேப்டன் மார்ட்டின் போனில் சொல்லி விட்டார்கள். ஆனால் ஜீப்பில் பெட்ரோல் இல்லையாம் உடனே பெட்ரோல் அடைத்து கொடுக்கச் சொன்னார்.
அப்புறம் உடனே திறந்து விட வேண்டியது தானே
பெட்ரோல் விடுவது போல் கில்லர் நடித்து வயர்லஸை துண்டித்து விட்டான். பின்னால் மார்ட்டினும் மற்றவர்களும் தீவிரவாதிகளிடம் துப்பாக்கியை காட்டி மடக்கிப் பிடித்து விலங்கிட்டனர். பின் மார்ட்டின் உள்பட 4 பேர் தீவிரவாதிகளின் முகமூடிகளை அணிந்து கொண்டு விமானம் இருக்கும் இடம் நோக்கி புறப் - பட்டார்கள்.
இப்ப... நாமதான் விடுதலை செய்யப்பட்ட தீவிர வாதிகள்


வெல்கம் வெல்கம்
யாரும் அசையக் கூடாது! இந்த மார்ட்டின் இருக்கிற வரை உங்கள் திட்டம் ஒன்றும் பலிக்காது. ம்! நடங்கள் சிறைச்சாலைக்கு! தப்ப முயற்சித்தால் உடன் உங்களை சுட்டுவிடுவேன். ம்
உங்கள் திறமையை பாராட்டு கிறேன்
நன்றி சார்
மார்ட்டின் வாழ்க

# நன்மை கண்டு மகிழ்வோம்

நடேச நாராயணன்

கரிக்கும் உப்பைத் தருகின்ற
கரிய கடலே யானாலும்
கழுத்துக் குரிய முத்தினையும்
கருணையோடு தந்திடுமே

குத்தும் முள்ளைத் தருகின்ற
கொடிய செடியே யானாலும்
கொத்துக் கொத்தாய் மலர்களையும்
கூந்தலுக்குத் தந்திடுமே.

நெருப்பைக் கக்கும் வெய்யிலினை
நிதமும் வீசும் சூரியன் தான்
இருட்டைப் போக்கும் ஒளியினையும்
என்றும் நமக்குத் தந்திடுமே

இவ்வாறாக எப்பொருளும்
இருவகை ஆற்றல் பெற்றிடலால்
அவ்வப்போது நன்மையினை
அவற்றில கண்டே மகிழ்வோமே

* * *





புள்ளி வைத்த கட்டங்
களை மட்டும் கலர்
பென்சிலால் நிரப்பு




# மூளைக்கு

இந்த ஏழு
துண்டுகளையும
சரியாக வெட்டி
ஒட்டினால் ஒரு
படம் வரும்.
அது என்ன?






விடை: எண்ணெய் பசை உடலில் உற்பத்தியால்

# வேலை

தொகுப்பு கீதா




விடை: ஒட்டகம்




## இளைஞனின் தந்திரம்!

முன்னொரு காலத்தில் ஒரு கொடுங்கோல் அரசன் இருந்தான். ஒரு குற்றமும் செய்யாத ஓர் இளைஞனை அவன் சிறையில் அடைத்து விட்டான். இளைஞனை விடுதலை செய்யும் படி அவனது உற்றார், உறவினர்கள் ,அரசனிடம் கெஞ்சினர். ஒரு நிபந்தனையின் பேரில் அவனை விடுதலை செய்வேன் என்று அரசன் கூறினான். இளைஞனைத் தன் முன்னால் கொண்டு வருமாறு ஆணையிட்டான்!

''இளைஞனே, கேள். உன்னிடம் ஓர் மெலிந்த செம்மறி ஆட்டையும், அதற்கு வேண்டிய ஒரு மாதத்திய தீனியையும் தருவேன். ஒரு மாதம் ஆனதும் அதை எடை போட்டுப் பார்ப்பேன். இன்று இருப்பது போலவே ஆட்டின் எடை இருக்க வேண்டும்! கொஞ்சமும் அதிகமாகக் கூடாது. ஆட்டின் எடை கூடினால், உன் தலையை வெட்டி எறிந்து விடுவேன்.'' என்றான்.

அரசனின் ஆணையை நிறைவேற்ற முடியாது என்பதை இளைஞன் உணர்ந்தான். வருத்தத்துடன் அவன் வெளியில் வந்தான். அப்போது அங்கே ஒரு கிழவனைச் சந்தித்தான். தன் நிலைமையைக் கூறினான்.

''மகனே! வருந்தாதே இதற்கு ஒரு வழி இருக்கிறது.'' என்றார் கிழவர். ''ஓர் ஓநாயைப் பிடித்து ஆட்டின் முன்னால் கட்டி விடு! ஆடு எவ்வளவு தீனி தின்றாலும் எடை அதிகமாகாது!'' என்றார்.

''இளைஞன் அப்படியே செய்தான். தனது பிறவிப் பகைவனான ஓநாயைக் கண்டு ஆடு நடுங்கியது. அது அரை மனதுடன் தீனியைத் தின்றது. எனவே அதன் எடை கூடவில்லை.

ஒரு மாதம் கழிந்தது. அரசன் ஆட்டை எடை போட்டுப் பார்த்தான். ஆட்டின் எடை கூடியிருக்கவில்லை! எனவே இளைஞனை விடுதலை செய்தான்!



## அதிசயக் குதிரை!

அன்வாரி என்ற 12'ம் நூற்றாண்டு பாரசீகக் கவிஞரின் திறமையை மெச்சிய சுல்தான் அவருக்கு ஒரு குதிரையைப் பரிசளிக்கும்படி உத்தரவிட்டார். குதிரை லாயத் தலைவன் கஞ்சப் பேர்வழி. சரியான ஒரு கிழட்டுக் குதிரையைத் தேர்ந்தெடுத்துக் கவிஞரின் இல்லத்துக்கு அனுப்பி வைத்தான்.

அடுத்த நாள் அரசவைக்கு நடந்தே வந்த கவிஞரைக் கண்டு மன்னன், ''கவிஞரே! எமது குதிரையில் சவாரி செய்யாமல் நடந்து வரும் காரணம் என்ன?'' என்று கேட்டார்.

கவிஞர், ''மன்னர், மன்னரே, நீ எனக்குப் பரிசளித்த குதிரை படுவேகமாகப் பறக்கும் போலும்! ஒரே இரவில் மண்ணை விட்டு விண்ணுக்குத் தாவி விட்டது!'' என்றார்.

ஆம்! வந்து சேர்ந்த இரவே குதிரை செத்து விட்டது!



## கேள்வியும்? பதிலும்!

அக்பர் சக்கரவர்த்தி ஒரு சமயம் பீர்பாலிடம், ''ஒரு மூடன், முட்டாள் தனமான ஒரு கேள்வியைக் கேட்டால் அதற்குப் பதில் சொல்லுவது எப்படி? '' என்று கேட்டார்.

''நாளை விடை சொல்லுகிறேன்'' என்று கூறிவிட்டு பீர்பால் போய் விட்டார். அவர் மறுநாள் தெருவோடு போய்க் கொண்டிருந்த ஒருவனைக் கூப்பிட்டு, ' நீ என்னோடு வா. அக்பர் சக்கரவர்த்தி என்ன கேட்டாலும் நீ பதில் சொல்லாமல் வாயை மூடிக் கொண்டிரு. அதனால் உனக்கு ஆபத்து ஒன்றும் வராது. அத்துடன் உனக்கு நான் நிறையப் பணமும் தருகிறேன்!'' என்று சொல்லி அவனை அழைத்துக் கொண்டு போனார்.

அக்பரிடம் போன பீர்பால், ''சக்கரவர்த்தி! தங்கள் கேள்வியை இவனிடம் கேளுங்கள். இவன்தான் இந்த நாட்டிலேயே மகா புத்திசாலி. சரியான விடை சொல்ல இவனுக்குத்தான் தெரியும்'' என்றார்.

அக்பர் அவனைப் பார்த்து ''ஒரு மூடன் முட்டாள்தனமான ஒரு கேள்வியைக் கேட்டால் அதற்குப் பதில் சொல்வது எப்படி?'' என்று கேட்டார்.

அவன் பீர்பால் சொன்னபடி, வாயைத் திறக்காமல் மௌனமாக இருந்தான். அக்பர் திரும்பத் திரும்ப அதே கேள்வியைக் கேட்டும் அவன் பதில் சொல்லவில்லை! ''இவன் பதிலே சொல்ல மாட்டேன் என்கிறானே!'' என்று பீர்பாலைப் பார்த்துக் கேட்டார் அக்பர்.

''இல்லையே! பதில் சொல்லிவிட்டானே!'' என்றார் பீர்பால். ''எங்கே சொன்னான்? மௌனமாகத்தானே இருந்தான்?'' என்றார் அக்பர்.

''மௌனம்தான் அந்தக் கேள்விக்குப் பதில்.'' என்றார் பீர்பால்! தம்முடைய கேள்வியையே முட்டாள் தனமான கேள்வியாக்கி விட்ட பீர்பாலின் சாதுர்யத்தைக் கண்டு கோபப்படாமல், அவரை மெச்சினார் அக்பர். பீர்பால் தான் இவ்வாறு மௌனமாக இருக்கும்படி கூறி அந்த ஆசாமியை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார் என்பதை அறிந்து கொண்ட அக்பர், இருவருக்கும் நிறையச் சன்மானம் வழங்கினார்.

# ஐஸக் நியூட்டனும் மீன்காரரும்!



பிரபல விஞ்ஞானி ஐஸக் நியூட்டன் கேம்பிரிட்ஜில் படித்துக் கொண்டிருந்தார். அப்போது, ஒரு முறை நியூட்டனின் வேலையாள், ''ஐயா ஒரு மீன் மூன்று பென்ஸ் வீதம் ஏழு மீன்கள் வாங்கினேன் மீன்காரரிடம். எவ்வளவு காசு கொடுக்க வேண்டும் அவருக்கு நான்...?'' என்று பணிவாக வினவினான்.

சிறிதும் தாமதிக்காத நியூட்டன், தனது லாகிருத அட்டவணையை எடுத்து வைத்துக் கொண்டு ஒரு பேப்பரும் பேனவுமாக இந்த சிறுகணக்கை செய்து பார்த்து, ''இருபதுக்கும் இருபத்தியிரண்டு பென்ஸிக்கும் இடையிலுள்ள தொகையை மீன்காரருக்குக் கொடுக்க வேண்டும்...'' என்று விடையளித்தார்.

''அப்படியா...? மீன்காரர் இருபத்தியொரு (21) பென்ஸ் தர வேண்டும் என்று அப்போது பிடித்தே சொல்லுகிறரே...'' என்று வேலையாள் சொன்னது தான் தாமதம். ''என்னை விட விரைவில் சரியான விடை கண்டுபிடித்த மீன்காரர் பெரிய கணித மேதையாகத்தான் இருக்க வேண்டும்...'' என்று சொன்னபடி வெளியே வந்தாராம் மீன்காரரைப் பார்க்கும் ஆவலில்.

தொகுப்பு: எஸ். இ. பாத்திமா.

நாடு -நல்லுரை

குறைந்த ஆசையே சந்தோஷ வாழ்க்கை

துருக்கி

போட்டியிடு, பொறாமைப்படாதே

ஆப்பிரிக்கா

தன்னை அறிவது அறிவு. தன்னை மறப்பது மடமை

ஜெர்மனி

நொண்டியை விட பொய்யன் தான் சீக்கிரம் வீழ்வான்

அமெரிக்கா

உள்ளத்தோடு போராடுவதே உயர்ந்த போராட்டம்

அராபியா

என்.எஸ்.கே.கிருஷ்ணமூர்த்தி

நாகலூர்

# பத்து கிளிகள்



அந்தக் காட்டிலேயே பெரிய மரம் அந்த ஆலமரம்தான். அந்த மரத்தில் பத்துக்கிளிகள் கூட்டமாக வசித்து வந்தன. அந்தக் கிளிகளில் ஒரு கிளி அவற்றிற்குத் தலைவனாக இருந்தது. அதன் பெயர் 'அறிவுக்கிளி' என்பதாகும். பெயருக்கு ஏற்பவே அது மிகவும் அறிவுடைய கிளியாக இருந்தது.

அவ்வாறு இருக்கையில் ஒரு நாள் மதியம் மழை கொட்டத் தொடங்கியது. கிளிகள் கவலையடைந்தன. மழை விடாமல் பெய்தது. கிளிகள் பசியால் வாடின. மழை மறுநாள் மாலை வரை பெய்தது. கிளிகள் கடவுளிடம் வேண்டின. சிறிது நேரத்தில் மழை விட்டது. உடனே கிளிகள் மகிழ்ச்சியுடன் இரை தேட பறந்தன. அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. எங்கு தேடியும் உணவே கிடைக்கவில்லை. திடீரென ஒரு இடத்தில் தானியங்கள் நிறைந்து கிடப்பதை கிளிகள் பார்த்தன. உடனே இறங்க முயன்றன. உடனே அறிவுக்கிளி, ''இங்கே இறங்காதீர்கள். இது வேடனின் வலையாக இருந்தாலும் இருக்கலாம். ஏனெனில் இங்கு தானியங்கள் வர வழியில்லை'' என்றது. அதன் அறிவுரையைக் கிளிகள் கேட்பதாக இல்லை. அவை ''நீ வேண்டும் என்றால் வராமல் இரு. எங்களைத் தடுக்காதே. எங்களால் பசி தாங்க முடியவில்லை'' என்றன. அறிவுக்கிளி எவ்வளவு கூறியும் அவைகள் கேட்காமல் கீழே இறங்கின. வேறு வழியின்றி அறிவுக்கிளியும் கீழே இறங்கியது.

அனைத்துக் கிளிகளும் தானியத்தைத் தின்று விட்டுப் பறக்க முயன்றன. ஆனல் அவைகளால் பறக்க முடியவில்லை. அவைகள் அப்பொழுதுதாம் நாம் வலையில் மாட்டியிருப்பது தெரிந்தது. உடனே அவைகள் தம் தவறை உணர்ந்து அறிவுக்கிளியிடம் தம்மை மன்னித்து இதில் தப்புவதற்கு வழி கூறுமாறு வேண்டின. உடனே அறிவுக்கிளியும் அவைகளை மன்னித்து ஒரு யோசனையைக் கூறத் தொடங்கியது. உடனே கிளிகள் கவனமாகக் கேட்கத் தொடங்கின. அறிவுக்கிளி தொடர்ந்து ''சற்று நேரத்தில் வேடன் வருவான். அவன் வருவதற்கு முன் நாம் இறந்து கிடப்பதைப் போன்று கிடக்க வேண்டும்.'' என்றது.

''அப்படிக் கிடந்தால் வேடன் என்ன செய்வான்'' என்று ஒரு கிளி கேட்டது. ''சொல்கிறேன் கேளுங்கள்!'' என்று கூறி பின்பு அதுவே தொடர்ந்து, ''நாம் அவ்வாறு கிடப்ப

என்.புகழேந்தி

தைப் பார்த்தால் வேடன் வருத்தத்து டன் ஒவ்வொருவராக கீழே தூக்கிப் போடுவான்.

இப்போதுதான் நீங்கள் கவனமாகக் கேட்க வேண்டும்.'' என்றது. உடனே கிளிகள் அனைத்தும் ''சரி'' என்றன.

''அவன் நம்மை ஒவ்வொருவராக கீழே போடும் போது ''பொத்'' என்று சத்தம் கேட்குமல்லவா அவற்றை நீங் கள் எண்ணிக் கொண்டே வர வேண் டும். பத்து முறை அவ்வாறு சத்தத் தைக் கேட்டவுடன் அனைவரும் சேர்ந்து மேலே பறந்து விடவேண்டும் '' என்று பேசி முடித்தது.

சிறிது நேரத்திற்குப் பிறகு வேடன் வந்து கிளிகள் இறந்து கிடப்பதைப் பார்த்தவுடன் வருத்தத்துடன் ஒவ் வொரு கிளியாக வலையிலிருந்து எடுத்துப் போட ஆரம்பித்தான். கிளி கள் பயத்துடன் எண்ண ஆரம்பித்தன. ஒன்று, இரண்டு, மூன்று....... ஒன்பது. பத்து என்று எடுத்துப் போட்டவுடன் கிளிகள் அனைத்தும் ஒரு சேர பறந்து சென்றன. வேடன் அவமானத்துடன் வீடு நோக்கிச் சென்றான்.

கிளிகள் ''அறிவுக்கிளி''யின் புத்தி சாலித்தனத்தை எண்ணி மகிழ்ந்தவாறு தம் இருப்பிடமான ஆலமரத்தை நோக் கிப் பறந்தன.

*



# காச நோய்க்கு எதிராக போராடுவீர்

1. இரண்டு வாரத்திற்கு மேல், உங்களுக்கு இடைவிடாமல் இருமல் இருந்தாலோ, அல்லது துப்பும் எச்சிலில் இரத்தம் தென்பட்டாலோ, நீங்கள் நுரையீரல் காச நோயினால் பாதிக்கப்பட்டிருக்கலாம்.

2. அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம், மருந்தகங்கள், அல்லது காச நோய் குணப்படுத்தும் மையங்களில் உங்கள் உடம்பை, குறிப்பாக எச்சிலை பரிசோதனை செய்யுங்கள்.




3. மருத்துவரின் ஆலோசனைப்படி காச நோய் குணப்படுத்தும் மருந்தினை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு ஒழுங்காக சாப்பிட்டு வந்தால், காசநோயை குணப்படுத்தலாம்.

4. நோயை குணபபடுத்துவதைவிட, அதை தடுப்பது சாலச் சிறந்தது. உங்கள் குழந்தைக்கு பி. சி. ஜி தடுப்பூசிப் போடுங்கள்.

மத்திய சுகாதார கல்வி அலுவலகம் (டைரக்ட்ரேட் ஜெனரல் ஆஃப் ஹெல்த் சர்வீசஸ்)
மத்திய சுகாதார குடும்பநல அமைச்சகம்
கோட்லா சாலை, புது தில்லி-110 002

davp 89/1023 TAM



# கிழவரும் இளைஞனும்

லெ. சங்கீதா

ஒரு கிழவரும், இளைஞனும் வீதிவழியாகப் போய்க் கொண்டிருந்தனர் வழியில் அவர்கள் ஒரு கோணிப்பையைக் கண்டனர். அந்தக் கோணிப்பை நிறைய தங்கக் காசுகள் இருந்தன. இளைஞன் அந்தக் கோணியை எடுத்தவாறே, ''இது கடவுளால் கொடுக்கப்பட்டது'' என்றான்.

கிழவர், ''இதை நாம் சரிபாதியாகப் பங்கிட்டு எடுத்துக் கொள்ளுவோம்'' என்று கூறினார்.

''அதெல்லாம் முடியாது. நாம் இருவரும் சேர்ந்து இந்தக் கண்டெடுக்கவில்லை. இதை நான் மட்டுமே கண்டுபிடித்தேன். இது எனக்கு மட்டுமே சொந்தமானது'' என்று இளைஞன் கூறினான் பணப்பையை தானே எடுத்துக் கொண்டான்.

கிழவர் அதற்கு ஒன்றும் பேசவில்லை. பணப்பையுடன் நடந்து சென்ற இளைஞனோடு தொடர்ந்து சென்று கொண்டிருந்தார்.

கொஞ்சத்தூரந்தான் அவர்கள் நடந்து சென்றிருப்பார்கள். திடீரென்று சில குதிரை வீரர்கள் அங்கே வந்தனர். பணப்பையுடன் நின்ற இளைஞனைப் பிடித்தனர். அதட்டினர்! ''இந்தப் பணத்தை திருடியது யார்... நீதானே...''

இளைஞன் கிழவரைப் பார்த்தான். பரிதாபமாகக் கூறினான்: ''பெரியவரே இந்தப் பணப்பையை நாம் இருவரும் கண்டெடுத்தோம் என்று சொன்னால்தான் நான் தப்பிக்க முடியும். தயவுசெய்து அப்படிக் கூறுங்கள்...''

கிழவர் அந்த இளைஞனை அலட்சியமாகப் பார்த்தார்:

''இந்தப் பணப்பையை நீதானே கண்டுபிடித்தாய். இது உனது சொத்து. உனது தெந்தரவு; எம் இருவருக்கும் சம்பந்தப்பட்டதில்லை இந்த விஷயம்''

குதிரைவீரர்கள் இளைஞனை இழுத்துக் கொண்டு சென்றனர். கிழவர் தனது பயணத்தைத் தொடர்ந்தார்.



## கடவுளும் படகும்

சில மீனவர்கள் படகில் பயணமானார்கள். அப்போது சூறாவளி வீசியது. அவர்கள் அஞ்சினார்கள். துடுப்புகளைக் கைவிட்டனர். ஆண்டவனிடம் உதவிக்கு வணங்கினார்கள்

படகு கரையிலிருந்து தொலைவுக்கு அடித்துச் செல்லப் பட்டது. மேலும் தொலைவிற்குச் சென்றது படகு.

மீனவர்களில் மூதியவர் கேட்டார்: 'சிறுவர்களே' ஏன் உங்களின் துடுப்புகளை எறிந்தீர்கள்?

அவர்கள் அமைதியாக இருந்தனர்.

மூதியவர் சொன்னார்: "தங்களுக்குத் தாங்களே துணையிருப்போர்க்கு மட்டுமே ஆண்டவன் உதவுகிறார்."

## எலியின் பேராசை

சுண்டெலி ஓர் உணவுப் பெட்டியைக் கண்டது. பெட்டியின் அடித்தளத்தைத் துளைபோட்டது. சுண்டெலி துளையின் வழியாக உள்ளே சென்றது. ஏராளமான உணவு வகைகளைக் கண்டது. பேராவல் கொண்டது. சுண்டெலி மிகுதியாக உண்டது. சுண்டெலிக்கு வயிறு பெருத்தது.

பகல் வந்தது. சுண்டெலி தன் பொந்துக்குள் செல்ல விரும்பியது. ஆனால் அதன் வயிறு புடைத்திருந்தது. உணவுப் பெட்டித் துளைவழியாக வெளியே செல்ல முடியாமற் போனது.

— டால்ஸ்டாய் கதைகள்

செ. யோகநாதன்

விஞ்ஞானி வரிசை



# ரொனால்டு ராஸ்

மலேரியாக்காய்ச்சல் என்பது சென்ற நூற்றாண்டுகளில் மனிதகுலத்தை பயமுறுத்திக் கொண்டிருந்த ஒரு பயங்கரமான வியாதி, மலேரியாக் காய்ச்சல் வந்தவர் உயிர்பிழைப்பது அரிது என்ற நிலைமைதான் அப்போது நிலவியது.

ரொனால்டு ராஸ் என்ற மருத்துவ அறிஞர் உலகிலே இந்த அச்சத்தை நீக்கினார். இவர் இங்கிலாந்தில் 1857ம் ஆண்டிலே பிறந்தவர். இவரது தந்தையார் இக்காலப் பகுதியில், இந்தியாவில் இராணுவ அதிகாரியாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

ராஸ், இளவயதிலே கவிதை பாடுவதிலும், கற்பனைக் கதைகள் புனைவதிலுமே ஆர்வம் கொண்டிருந்தார் ஆனால் தந்தையாரோ, இவரை ஒரு மருத்துவராக்க விரும்பினார். வேறுவழியில்லாமல் ராஸ், மருத்துவக் கல்வியைப் பயின்றார்.

ராஸ்—பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி ஆகியமொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். மருத்துவரான பிறகும் இவரின் கவனம், கவிதையிலும், இசையிலுமே சென்றது.

சில நாட்களில் இவர் மனமே இவரை வருத்தத் தொடங்கிற்று. மருத்துவப் பயிற்சி பெற்ற பிறகும் மக்களுக்கு சேவை செய்யாமல் இருக்கிறோமே என வருந்தினார். எனவே மனிதகுல எதிரியான மலேரியாக்காய்ச்சலை ஒழிப்பது பற்றி எண்ணினார். அது பற்றிய ஆராய்ச்சியில் மும்முரமாக இறங்கினார்.

மலேரியாக்காய்ச்சல் என்பது ஒட்டுணிகளால் (Parasites) உண்டாவதென்பதை அவர் அறிந்திருந்தார். தற்செயலாக இன்னொரு ஆராய்ச்சி அறிஞரான சர். பாட்ரிக் மேன்சன் (Sir. Patrickmanson) என்பவரை ராஸ் சந்தித்தார். மலேரியா கொசுவினால் பரவ வாய்ப்பு உண்டு என்று அவர் கூறியது ராஸைக்கவர்ந்தது.

உடனே ராஸ், கொசு வேட்டை தொடங்கினார். பெருந்தொகையான கொசுக்களைப்பிடித்தார். அவற்றை மலேரியாக்காய்ச்சலுள்ளவர்களுக்கு கடிக்கும்படி செய்தார். பிறகு அந்தக்கொசுக்களை அறுத்தார். அறுத்த இரத்தத்தை ஆய்வு செய்தார். நாட்கணக்கில் ஆய்வு செய்ததற்கு பலனும் கிட்டிற்று. அக் கொசுக்களின் வயிற்றிலே, மலேரியாக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தவர்களின் இரத்தத்தில் உள்ள ஒட்டுணிகளைக் கண்டார். அந்த ஒட்டுணிகள் கொசுவின் வயிற்றிலே வளர்ந்தன. பெருகின. கொசுவின் வாய்க்குப் பக்கத்தில் உள்ள உமிழ்நீர் சுரப்பியை வந்தடைந்தன. பின்னர் இந்தக் கொசுக்கள், இன்னொரு மனிதனைக் கடித்ததும் அவனுக்கு இக்காய்ச்சல் உண்டாகும் என்பதை ராஸ் அறிந்துகொண்டார்.

மலேரியாவைப் பரப்பும் கொசுவுக்கு இவர் அனாபலீஸ் (Anopleles) எனப் பெயரிட்டார். அனாபலீஸின் இறக்கையில் மூன்று கருங்கோடுகள் இருந்தன.

தனது ஆராய்ச்சியின் முடிவை இவர் வெளியிட்டார் அனாபலீஸை அழித்தால் மலேரியாவைத் தடுத்து விடலாம் என்றார். சதுப்புப் பகுதி, சாக்கடை நிலங்களில் எண்ணெய் தெளித்து மலேரியாவை கட்டுப்படுத்துவதில் வெற்றியும் கண்டார். இவரது ஆய்வின் பயனாக டி.டி.ரி (D.D.T) ஏரோசால்ஸ் (Aerosols) போன்றவை மலேரியா கொசு ஒழிப்புக்கு கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ராஸின் இந்த அரிய முயற்சிக்காக 1902ம் ஆண்டில் இவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.



நத்தையின் முன்னால் நீட்டிக் கொண்டிருக்கும் இரு உறுப்புகள் உணர் கொம்புகளாகும். இவை தொடு உணர் செயலுடையன. எனவே நீங்கள் அதைத் தொட்டால், அவை, தொடு உணர்ச்சி காரணமாக அதனை உணர்ந்து பாதுகாப்புக்காகத் தம்மை உள்ளே இழுத்துக்கொள்ளும்.




கதிரியக்கம் ஆனது மனிதனை மூன்று விதங்களில் தாக்கலாம். நேரடியாக; கதிரியக்கம் கலந்த காற்று, தூசு மூலமாக; குடிநீர், உணவு இவற்றில் பரவுவதன் மூலமாக மேலும், கதிரியக்கம் தாக்கிய புல், பயிர்களை மேயும் கால்நடைகளின் இறைச்சி, பால் பொருள்கள் மூலம் மனிதனுக்கு உடல்நலக் குறைவு ஏற்படலாம்.

முக்கியமாக அயோடின்-131, சீஸியம்-137, ஸ்ரோன்ஷியம்-90, புளூடோனியம்-239 ஆகிய கதிரியக்கத் தனிமங்கள் மிகவும் அபாயகரமானவை.

இவை மக்களின் உடல் நலனைப் பற்பல முறைகளில் பாதிக்கும். எலும்பு மச்சை மற்றும் ரத்தச் சிவப்பு அணுக்கள் அழிவு; இரத்தப் புற்று; புற்று நோய்க் கட்டிகள்; மரபியல் கோளாறுகள் முதலிய பயங்கர நோய்கள் கதிரியக்கத்தால் ஏற்படக்கூடியவை.

ஈசாப் கதைகள்:

# நரியும் வெள்ளாடும்

ஆழங்குறைந்த கிணற்றில் நரி ஒன்று தவறி விழுந்து வெளியேற முடியாமல் சிரமப்பட்டது. யாராவது உதவி செய்தால்தான் மேலே ஏறி வரமுடியும். அப்போது அங்கு வந்த வெள்ளாடு கிணற்றினுள் எட்டிப் பார்த்தது.

அங்கு நரி இருப்பதைக் கண்டு, ''நண்பரே கிணற்றுத் தண்ணீர் குடிப்பதற்கு உகந்ததா?'' என்று வெள்ளாடு நரியிடம் கேட்டது. மனதிற்குள் சதி திட்டமிட்ட நரி உடனே, ''ஆஹா, குடிப்பதற்கு மிக அருமையானதண்ணீர். நான் அதிகமாகக் குடித்து விட்டேன்'' என்று கூறியது.

''முட்டாள் வெள்ளாடும் தாகமாயிருந்ததால் கிணற்றுக்குள் தாவியது. சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த நரி உடனே வெள்ளாட்டின் முதுகின் மேல் தாவி கிணற்றை விட்டு வெளியேறியது. வெள்ளாடு கிணற்றுக்குள் கிடந்து மாண்டது.

அறியாமல் எந்தக் காரியமும் செய்தல் கூடாது.

மாணிக்கம்



# பிஞ்சு மனம்

சுகீசன்

"அப்பா... அப்பா... கதை சொல்லுப்பா. எங்க ஸ்கூல்ல நாளைக்கு ஆளுக்கொரு கதை சொல்லணும்னு டீச்சர் சொல்லி இருக்காங்கப்பா... சொல்லுப்பா...." படுத்தபடி ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த தன் தந்தையை உலுக்கினான் பாலு. பக்கத்துத் தெருவில் இருக்கும் நர்ஸரி ஸ்கூலில் பாலு படிக்கிறான். இந்த வருடம் அவன் மூன்றாம் வகுப்பு. படிப்பில் பாலு படு சுட்டி. படிப்பில் மட்டுமல்ல மற்ற எல்லா விஷயங்களிலுந்தான்!

"கதையா! எனக்குத் கதை சொல்லவே தெரியாதுடா கண்ணா!" சமாளிக்கப் பார்த்தார் பாலுவின் அப்பா.



னையே பார்த்தபடி அம்மாவின் மடியில் படுத்துக் கொண்டிருந்தான். ஃபேனின் இறக்கைகள் சுழல்வது போல் அவன் எண்ணங்களும் சுழன்றன. வாயில் விரலை வைத்து விட்டான் என்றால் எதையோ யோசிக்கிறான் என்பதுதான் அர்த்தம். திடீரென்று ஒரு சந்தேகம். அம்மாவின் மடியிலிருந்து திடுதிப்பென்று எழுந்த அவன் சுற்றும் முற்றும் பார்த்தான். மறுபடியும் தூங்குவது போல் பாவனை செய்து கொண்டிருந்த அப்பாவைப் பிடித்து உலுக்கினான். அவர் முதுகில் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

''அப்பா... அப்பா...''

'பாவம் குழந்தை' - என்று பரிதாபப் பட்ட அப்பா ''என்ன பாலு'' என்று அன்போடு கேட்டார்.

''காலையில் என்னை ஸ்கூலுக்கு கூட்டிப் போனீங்க இல்லே.... அப்ப ஒரு ஃபையன், அதாம்பா நம்ம வீட்டுக்குக் கூட அடிக்கடி வந்து 'அம்மா சோறு போடும்மா...' அப்படீன்னு கேப்பானே, அந்தப் பையன் ஏம்பா பிளாட்பாரத்தில் படுத்துக்கிட்டு அழுது கொண்டு இருந்தான்... என்னப்பா அவனுக்கு.''

காலையில் கண்ட காட்சி பாலுவின் மனதில் ஆழமாக பதிந்து விட்டதை நினைத்த அப்பா பாலுவின் பரிதாபப் படும் உணர்வைக் கண்டு தனக்குள் நெகிழ்ந்து போனார்.

''ஓ! நீ அதைக் கேக்கிறியா! பாவம் பாலு, அந்தப் பையன். ரெண்டு நாளா மழை பெஞ்சதுதான் உனக்குத் தெரியுமே... மழையில் நனைஞ்சிட்டிருக்கான்... அதான் நல்ல ஜூரம்.''

''ஏம்பபா அவன் அம்மா-அப்பா அவனுக்கு மருந்து வாங்கித் தர மாட்டாங்களா? அவங்க ரொம்பக் கெட்டவங்களா...?'' பரிதாபமாகக் கேட்டான் பாலு. அவன் முகம் ஏனோ சற்று வாடியது.

''இல்லேடா கண்ணா அவனுக்கு அப்பா - அம்மா யாருமே கிடையாது. அவன் ஒரு அனாதை.''

''ச்...சு... ச்...சு...'' யாரோ ஒருவனுக்காக பரிதாபப்பட்ட அந்தப் பிஞ்சு உள்ளம் சிறிது நேரம் மெளனமாக இருந்தது.

''ஏம்ப்பா மனுஷனை ஆண்டவன் தானே படைக்கிறார்னு சொன்னீங்க.'' மீண்டும் ஒரு பெரிய வெடிக்குண்டைத் தூக்கிப் போட்டான் பாலு.

''ஆமாம்...'' அப்பா மெதுவாகத் தலையை ஆட்டினார்.

''அப்படீன்னா ஏம்ப்பா அவனை மட்டும் ஆண்டவன் அனாதையா படைச்சாரு? அவனுக்கு வீடு இல்ல - அம்மா இல்ல - அப்பா இல்ல... ஏம்ப்பா...?''

---

பிப்ரவரி '90 இதழில் பிரசுரமான 'தீயோர் நட்பு தீமை தரும்' எனும் கதையை எழுதியவர்: க. அன்பழகன், சேந்தூர்.

மார்ச் '90 இதழ் சிறந்த கேள்விக்கான பரிசு பெறுபவர்.
ஆர். நாகப்பன், சென்னை.

"போப்பா சும்மா சொல்றீங்க.... சொல்லுங்கப்பா..."

"ஆமாண்டா, எனக்குக் கதையே தெரியாது. உங்கம்மாவுக்கு நிறைய தெரியும். அதோ பாரு இப்பக்கூட கத புஸ்தகந்தான் படிச்சுக்கிட்டிருக்கா.... போ..."

தன்னை விட்டால் போதுமென்று எப்படியோ தப்பித்துக் கொண்ட அப்பா, நிம்மதியாக பெருமூச்சு விட்டார். எங்கே மீண்டும் வந்து தன்னைப் பிடித்துக் கொள்வானோ என்ற பயம். கண்களை மூடிக் கொண்டு உறங்குவது போல் பாவனை செய்தார்.

பாலுவா விடுவான்! அம்மாவைப் பிடித்துக் கொண்டான். கதைப் புத்தகம் படித்துக் கொண்டிருந்த அம்மா அப்பாவை முறைத்துப் பார்த்தாள்.

"அம்மா... அம்மா.... கதை சொல்லும்மா...." மீண்டும் பழைய பல்லவியை ஆரம்பித்தான் பாலு.

"கதை எல்லாம் நாளைக்குச் சொல்கிறேன் நீ தூங்குடா கண்ணு.... என் ராஜா இல்ல... தூங்கும்மா..." பாலுவை அன்போடு இழுத்து அம்மா தன் மடியில் படுக்க வைத்து மெல்லத் தட்டினாள். தூங்க வைக்க முயன்றாள். பாலு தன் வலது கை கட்டை விரலை வாயில் வைத்துச் சூப்பியபடி கண்களைக் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டு அம்மாவைஏதோ புதிதாக பார்ப்பது போல் பார்த்தான். பாவம் அவனால் எவ்வளவு நேரம் அப்படி இருக்க முடியும்! வாயிலிருந்து விரலை எடுத்துக் கொண்ட அவன் மீண்டும் அதே ராகத்தைப் பாடினான்.

"அம்மா.... கதை சொல்லும்மா...."

"சொன்னாக் கேக்கணும்... நல்ல பையன் இல்லே தூங்கு... அம்மாவுக்கு நிறைய வேலை இருக்கு. வீடெல்லாம் மெழுகணும். கோலம் போடணும். கடைக்குப் போய் காய்கறி - பூ - பழம் இன்னும் எல்லாம் வாங்கிட்டு வரணும். உனக்குத் தெரியுமா? நாளைக்கு வருஷப்பிறப்பு!"

"வருஷப்பிறப்பா! இப்பத் தானேம்மா வந்திச்சு, எனக்குக் கூட ஸ்கூல் லீவு விட்டாங்களே.... அதுக்குள்ளே இன்னொரு வருஷப் பிறப்பா." மூன்று மாதங்களுக்கு முன்னால் வந்து போன ஆங்கில வருஷப் பிறப்பைத்தான் பாலு அப்படிக் கேட்டான்.

"அது இல்லே பாலு! முன்ன வந்தது இங்கிலீஷ் வருஷப் பிறப்பு. நாளைக்கு தமிழ் வருஷப் பிறப்பு. தமிழர்களுக்கு தமிழ் வருஷப் பிறப்பு ஒரு நல்ல நாள். மகிழ்ச்சியா கொண்டாடுவாங்க..."

"ம்.... அப்படியா!" அம்மா சொல்வதை ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்த பாலு மறுபடியும் வாயில் கட்டை விரலை வைத்துச் சூப்பினான். மேலே ஓடிக் கொண்டிருந்த ஃபே



குழந்தைகளுடைய கேள்விக்கு மகா அறிவாளிகளால் கூட பதில் சொல்ல முடியாதுங்கிறது எவ்வளவு உண்மை! பாலுவின் கேள்விக்குப் பதில் கூற முடியாமல் விழித்தார் அப்பா.

"வந்து... வந்து..."

"என்னப்பா வந்து... வந்துங்க நீங்க... சொல்லுங்கப்பா. ஏன் ஆண்டவன் அந்தப் பையனை அனாதையா படைச்சாரு?" மீண்டும் தன் கேள்வியை ஞாபகத்துக்குக் கொண்டு வந்தான் பாலு.

"எல்லாம் அவங்க அவங்க செய்த பாவம்..." ஏதோ பதில் சொல்லி விட்டோம். இது அவனுக்குப் புரியாது. இனி எதுவும் கேட்க மாட்டான் என்று மீண்டும் கண்களை மூடித் தூங்குவது போல் நடித்த அப்பாவை பாலுவின் மற்றொரு கேள்விக் குண்டு அவரது மண்டையைத் துளைத்தது.

"பாவம்னு சொன்னீங்களே அப்படின்னா என்னப்பா?"

'இதென்ன பெரிய வம்பா போச்சே...' தனக்குள் முணுமுணுத்துக் கொண்ட அப்பா. "அதெல்லாம் உனக்குப் புரியாதுடா ராஜா.... போய் படுத்துத் தூங்கு..."

"எல்லாம் எனக்குப் புரியும் சொன்னாத்தான் தூங்குவேன்."

"விடமாட்டியே... வர வர உன் பிடிவாதம் ரொம்பத்தான் கூடிகிட்டே போவுது. எனக்குக் கொஞ்சம் கூட பிடிக்கலே போ... போ..." எரிந்து விழுந்தார் அப்பா.

பாவம் பாலு. அவன் முகம் மிகவும் வாடிப் போனது.

"குழந்தை எவ்வளவு ஆசையா கேக்கறான். சரியாகத்தான் பதில் சொல்லுங்களேன்... நீ வாடா ராஜா, அப்பா அப்படித்தான் எப்பவும்.... நான் சொல்றேன் வா..."

தாய் எல்லோருடைய இடத்தையும் வகிக்க முடியும். ஆனால் தாயின் இடத்தை யாராலும் வகிக்க முடியாது என்பது எவ்வளவு உண்மை! அப்பா கோபித்துக் கொண்டதால் முகம் வாடிப் போன பாலு அம்மாவின் அன்பு மொழியைக் கேட்டவுடன் பூப் போல ஓடிச் சென்று அம்மாவின் மடியில் ஏறிக் கொண்டான். குழந்தைக்கு அம்மாவின் மடிதானே முதல் பள்ளி!

"போ... உம் பேச்சி கா... நான் அம்மாகிட்ட போறேன் போ..." என்று ஓடோடி வந்து தன் மடியில் ஏறிக் கொண்ட பாலுவைக் கட்டி அணைத்துக் கொண்டாள் அம்மா. அவன் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அவனுக்குப் புரியும்படியாக சொன்னாள். சிறிது நேரத்தில் அம்மாவின் மடியிலேயே அவன் தூங்கிப் போனான்.

மறுநாள்!

வருஷப் பிறப்பிற்காக அவனது அம்மா ஸ்பெஷலாக பலகாரங்கள் செய்து கொண்டிருந்தாள். பக்கத்தில் வந்து அமர்ந்து கொண்டான் பாலு.

"அம்மா... எனக்கொரு வடை தாம்மா..."

"சீ... சீ... சாமிக்குப் படைக்காம தின்னக் கூடாது... சாமி கண்ணைக் குத்திடும்."

"போம்மா உனக்கு ரொம்பத் தெரியுமா?"

"என்னது எனக்குத் தெரியுமாங்கிற..." கண்களை அகல விரித்தாள் அம்மா.

"குழந்தையும் தெய்வமும் ஒண்ணாம்! எங்க டீச்சர் சொன்னாங்க. ஏன், நீ கூட ராத்திரி சொன்னியே மறந்துட்டியா..! எங்காச்சும் குழந்தையே குழந்த கண்ணைக் குத்துமா? பொய் தானே சொல்ற... பொய் சொன்ன வாய்க்கு போஜனம் கிடைக்காது..." அம்மாவின் கழுத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்ட பாலு கலகலவென்று சிரித்தான்.

"சரியான போக்கிரி...! செல்லமாகக் கடிந்தபடி அம்மா அவனை இழுத்து கன்னத்தில் நான்கைந்து முத்தங்கள்

கொடுத்தாள். சரி சரி இன்னும் கொஞ்ச நேரம் இரு.... அப்பா இதோ வந்துவிடுவார். வந்தவுடனே இலைப் போட்டு படைக்க வேண்டியதுதான் என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே பாலுவின் அப்பா வந்து விட்டார்.

சமையலை முடித்துவிட்ட அம்மா, கூடத்தில் இலைகள் போட்டு சாதம் கறி பலகாரம் முதலியவற்றைப் பரிமாறினாள். புத்தாண்டுக்காக எடுத்திருந்த புதிய துணிகளைக் கொண்டு வந்து வைத்தாள். அப்பா கற்பூரத்தை ஏற்ற பாலு அதை எடுத்து சாமிக்கு தீப ஆராதனை செய்தான்.

ஆயிற்று எல்லோரும் சாப்பிட்டு முடித்தனர். வெளியே ''அம்மா சோறு போடுங்கம்மா...'' பழக்கப்பட்ட அதே பையனின் குரல். சட்டென்று எழுந்தான் பாலு. தட்டில் நிறைய பலகாரங்களை எடுத்துக் கொண்டு கூடத்திற்கு ஓடினான். சிறிது நேரம் தயங்கிய அவன் ஓடோடிச் சென்று பலகாரத்தையும் கூடவே ஒரு காகிதப் பொட்டலத்தையும் அந்தப் பையனிடம் கொடுத்தான். அந்தப் பையனின் முகம் பூவாக மலர்ந்தது.

''மீனாட்சி அந்தப் புது துணியை எடுத்து வா... பாலுவுக்குப் போட்டு விடலாம்...'' புத்தாண்டு தினத்துக்காக புதுத்துணிகள் வைத்து படைப்பது அவர்கள் குடும்ப வழக்கம். அதைத் தான் பாலுவின் அப்பா அவன் அம்மாவிடம் எடுத்து வரச் சொன்னார்.

கூடத்திற்குச் சென்ற அம்மா படபடப்பாக வெளியே வந்தாள்.

''என்னங்க நம்ம பாலுவோட துணியைக் காணலியே...''

''என்னது துணி காணலியா? நல்லா தேடிப்பாரு...'' என்றார் பாலுவின் அப்பா... திடீரென்று பாலு அழ ஆரம்பித்தான். அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை.

''பாலு ஏன் அழற...?''

''அம்மா நீங்க தானே சொன்னீங்க... ஆண்டவனுக்குக் கருணையே இல்லையா, ஏன் அந்தப் பையனை அனாதையா படைச்சாருன்னு நான் கேட்டேன், நீங்க சொன்னீங்க, கடவுளுக்கு கருணை இருக்கிறதால் தான் கருணை உள்ளம் கொண்டவங்களைப் படைச்சிருக்காரு... அவங்க அன்பு காட்டறப்போ அவனுடைய கஷ்டமெல்லாம் தீர்ந்திடும் அப்படீன்னீங்க...''

''ஆமாம் அதுக்கென்ன?'' -- அம்மா.

''இருக்கிறவங்க இல்லாதவங்களுக்கு கொடுத்தா இல்லாதவங்க உலகத்தில இருக்க மாட்டாங்க அப்படீன்னு நீங்க தானே சொன்னீங்க.''

''ஆமாம் அதுக்கென்ன?''

''வருஷப் பிறப்பு அன்னிக்கி சந்தோஷமா இருந்தா வருஷம் பூராவும் சந்தோஷமா இருப்போம்னு நீங்க தானே சொன்னீங்க?''

''ஆமாம், அதுக்கென்ன இப்ப. நீ ஏன் அழற...?'' அம்மா.

''அதனாலதாம்மா வருஷம் பூரா சிரிச்சிக்கிட்டே இருக்கட்டும்னு என் புதுத்துணிய அந்தப் பையனுக்குக் கொடுத்திட்டேம்மா...''

அம்மாவின் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது. ஓடிச் சென்று அவள் பாலுவைத் தூக்கி மார்போடு அணைத்துக் கொண்டாள். தன்னை அடிக்க மாட்டாள் என்பதை உணர்ந்த பாலு அம்மாவின் கழுத்தைக் கட்டிப் பிடித்து அவள் கன்னத்தில் இச் சென்றான்.

கூடத்தில் இருந்து வெளியே வந்த அப்பா தனக்காக எடுத்திருந்த வேட்டியை எடுத்து வந்தார். அதனை பாலுவின் இடுப்பிலே கட்டினார். துண்டை அழகாக மடித்து அவனது தோள்களில் தொங்க விட்டார். பாலுவைப் பார்க்க சாட்சாத் திருஞான சம்பந்தர் போலவே இருந்தான். அம்மாவும் அப்பாவும் பூரித்துப் போனார்கள்.

என் பயண அனுபவம்

# பனி மாளிகை

அ.ராஜேந்திரன்,
சென்னை-34.

சென்னையில் தியாகராயநகர் வழியாகச் செல்லும் பல்லவன் பேருந்து ஒன்றில் - அது வேலை நேரம் அலுவலகத்துக்கு செல்வதால் கூட்டம் அதிகமாக இருந்தது. அந்த பஸ்ஸில் உள்ள கண்டக்டர் வித்தியாச மானவராக இருந்தார். அதாவது தூய தமிழில் பேசுபவர். இங்கே அவர் கூறியது.

முன்னால் உள்ள ஆடவர்கள் பயணச்சீட்டு வாங்கிவிட்டீர்களா? தோழரே வழிவிடுக என்று சொல்லி, முன் செல்லுங்கள். அம்மா மஞ்சள் சேலை அணிந்திருப்பவரே சற்று முன் செல்லுங்கள். அண்ணே வழிவிடுக என்று சொன்னால் முத்தா உதிர்ந்துவிடும். அங்கே சிகப்புச் சேலை அணிந்திருப்பவரே உங்கள் கைப்பை கீழே விழுந்து விட்டது பாருங்கள் (Hand bag) அப்புறம் அய்யோ என்னுடைய பணம் போய்விட்டதே என்று கூச்சல் போடாதீர்கள். இப்படி அவர் தூய தமிழிலேயே பேசுவார்.




ஒரு பெண்மணி ஆங்கிலத்தில் சிக்ஸ்டி கொடுங்கள் என்று சொன்னதுதான் தாமதம். உடனே என்ன? பைந் தமிழல் அறுபது பைசா என்று சொன்னால் என்ன? என்றார்.

அங்கு ஏறிய ஓர் இளைஞர் இதைப் பார்த்ததும் கிண்டலாக ஐஸ் அவுஸ் என்பதற்குப் பதிலாக பனிவீடு ஒன்று கொடுங்கள் என்றார். அந்த இளைஞனை எரிச்சலுடன் பார்த்த கண்டக்டர் திட்டுவார் என்று பார்த்தால் அது என்ன பனி வீடு கொச்சைத் தமிழில்? அழகாக, பனிமாளிகை என்றால் என்ன என்று சொன்னவுடன் பஸ்ஸில் ஒரே சிரிப்பு. இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு கண்டக்டர்.

# முழு முட்டாள்கள்

கடையநல்லூர் கணேசன்

இரு முதலாளிகள் தங்கள் வேலைக்காரர்களின் முட்டாள் தனத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

ஒருவர் தன் வேலைக்காரன் எவ்வளவு மடையன் என்று மற்றவருக்குக் காட்ட அவனிடம் பத்து ரூபாய் பணம் கொடுத்து, "கடைக்குப் போய் ஒரு டெலிவிஷன் வாங்கி வா!" என்றார். வேலைக்காரனோ பத்து ரூபாயை வாங்கிக் கொண்டு கிளம்பி விட்டான். மற்றொரு முதலாளி தன் வேலைக்காரன் எவ்வளவு முட்டாள் என்பதைக் காட்ட, "நான் கம்பெனியில் இருக்கிறேனா, இல்லையா என்று பார்த்து விட்டு வா" எனக் கூறினார். அவன் மறுப்பேதும் சொல்லாமல் கிளம்பிவிட்டான்.

இரு வேலைக்காரர்களும் வழியில்



சந்தித்தனர். "என் முதலாளிக்கு துளிக் கூட அறிவு கிடையாது. இன்று ஞாயிற்றுக் கிழமை! எல்லாக் கடைகளும் மூடி இருக்கிறது. இன்று போய் டெலிவிஷன் வாங்கி வரச் சொல்றாரே!" என்றான்.

"உன் முதலாளியாவது பரவாயில்லை! என் முதலாளி ரொம்ப மோசம்! அவர் கம்பெனியில் இருக்காறான்னு பார்த்துட்டு வரச் சொல்றார்? கம்பெனிக்கு ஒரு போன் பண்ணி அவர் அங்கே இருக்காறானு கேட்டுடலாமே! அறிவு கெட்டவர்!" என்று மற்றொருவன் கூறினான்.

இது எப்படி இருக்கு?

# பலே. பலே, வாத்தியார்

என்.சிவகுமார்
பரங்கிப்பேட்டை

நான் சிதம்பரம் சென்றுவிட்டு பஸ்ஸில் திரும்பி வந்து கொண்டிருந்தேன். அந்த பஸ்ஸில் ஓர் ஆசிரியர் சுமார் இருபது மாணவர்களோடு ஏறினார். அவர் கையில் ஒரு சிப்பம் இருந்தது. அதில் எலுமிச்சம் பழங்கள் இருந்தன.

பஸ் கண்டக்டர் அந்த சிப்பத்திற்கு லக்கேஜ் கேட்டார். ஆனால், ஆசிரியர் தர மறுத்துவிட்டார். கண்டக்டர் லக்கேஜ் வாங்காமல் விடுவதில்லை என்கிற தொனியில் பேசினார்.

உடனே ஆசிரியர் தன்னிடமிருந்த



சிப்பத்தைப் பிரித்து அதிலிருந்த எலுமிச்சம் பழங்களை ஒருவருக்கு நான்கு பழங்கள் வீதம் மாணவர்களிடம் கொடுத்துவிட்டார். லக்கேஜ் கேட்ட கண்டக்டரால் ஒன்றுமே பேச முடியவில்லை. அந்த பஸ்ஸில் இருந்த அனைவருமே விழுந்து விழுந்து சிரித்தோம்.

அந்த நிகழ்ச்சியை இன்று நினைத்தால் கூட சிரிப்புத்தான் வரும்!

## உருவகக் கதைகள்

# செய்த தருமம்

நாகரத்தினம்



**விதி** சிரித்தது.

தர்ம தேவதை அழுது கொண்டிருந்தாள்.

தர்மதேவதையின் அழுகைக்குக் காரணம் நேற்று நடந்த பாரதப் போர். அப்போரில் கொடைக்கோர் கோமகன் - தர்மத்தின் தலைமகன் கர்ணன் இறந்து விட்டான்.

தன் மகனை இழந்த அந்த தர்மதேவதை அழுதாள்.

''தர்ம தேவதையே! நீ ஏன் அழுகிறாய்? உன் வளர்ப்புப் பிள்ளை கர்ணன் தர்மத்தின் தலைமகனாக இருந்தாலும் கௌரவர்கள் பக்கம் - அதர்மத்திற்குத் துணை போனதால் தானே இறக்க நேரிட்டது'' என்று விதி கேட்டது.

''செய்நன்றி மறவா செம்மல் கர்ணன். அவனைப் பொறுத்தவரை அது நேர்மை - அது தர்மம். இனி என் கர்ணனைப் போல் எவர் பிறக்கப் போகிறார்கள்?'' மேலும் அழத் தொடங்கியது தர்ம தேவதை.

''தர்மம் தலை காக்கும் என்பார்களே! ஏன் உன் கர்ணனைக் காக்கவில்லை? அவன் செய்த தருமமெல்லாம் என்னவாயிற்று?''

"விதியே! தருமம் அவன் உயிரைக் காத்துக் கொண்டிருந்தது. அந்த தர்மத்தின் பயனையும் கிருஷ்ணர் அந்தணராக வந்து வாங்கிக் கொண்டாரே! நீ பார்க்கவில்லையா?"

அதைக் கேட்டு விதி ஏளனமாகச் சிரித்தது.

"ஏன் சிரிக்கிறாய்?"

"சிரிக்காமல் என்ன செய்வது? எனக்கு அங்கேதான் ஒரு கேள்வி எழுகிறது?"

"நீ என்ன சொல்கிறாய்?"

"செய்த தரும புண்ணியங்கள் அனைத்தையும் கர்ணன் அந்தக் கண்ணனுக்குத் தாரை வார்த்துக் கொடுத்தான். அப்படித் தானே?"

"ஆமாம்."

"அப்படி தான் செய்த புண்ணியங்களைக் கொடுப்பதும் ஒரு புண்ணியம் தானே! அப்புண்ணியம் கர்ணனின் உயிரைக் காக்கக் கூடாதா?" விதி தன் ஐயத்தைக் கேட்டது.

"விதியே! உனக்கு மதியின் பெருமை தெரியாதா? அதனால்தான் 'விதியை மதியால் வெல்லலாம்' என்கிறார்கள்.

"அங்கே எப்படி விதி விளையாடியது?"

"அந்தணராக வந்த கிருஷ்ணர் என்ன கேட்டார்? 'செய் தருமம் அனைத்தையும் தருக' என்று கேட்டார் அல்லவா?"

"ஆமாம்."

"செய் தருமம் என்றால் என்ன பொருள்? இலக்கணம் உனக்குத் தெரியாது. அது கர்ணனுக்காக வந்த 'வினைத்'தொகை. செய் தருமம் என்றால் செய்த தருமம் - செய்கின்ற தருமம் - செய்யும் தருமம் என்றே பொருளாகும். தருமத்தைக் கொடுப்பதால் வரும் புண்ணியத்தையும் கொடுத்ததாகப் பொருள். இப்படி இருக்க என் கர்ணன் எப்படி பிழைக்க முடியும்?" தரும தேவதை இப்படி விளக்கமாகச் சொல்லிவிட்டு சோகமாய் வீற்றிருந்தாள்.

விதி சிந்தித்தது.

* * *

ஒருவர்: இப்பவெல்லாம் சொந்தப் பேரில கதை எழுதறதையே விட்டுட்டீங்களே, ஏன்? புனை பெயரில் ரொம்ப மோகமா?

மற்றவர்: இல்லே! சொந்தமா கதை எழுதறத நிறுத்திட்டேன்.



சிரிப்பு | தொகுப்பு: வி.கலா

# 'லாலிபாப்'



அறுவை சிகிச்சை என்றால் பெரியவர்களே அஞ்சுவார்கள்; இதில் குழந்தைகள் பற்றிக் கேட்கவே வேண்டாம். அறுவை சிகிச்சை செய்யவேண்டியகுழந்தைகளுக்கு மயக்க மருந்து கொடுப்பதற்கு, அமெரிக்க மருத்துவமனைகளில் விரைவில் எளிய அணுகுமுறையொன்று கையாளப்படக் கூடும். குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தமான ''லாலிபாப்'' என்ற மிட்டாய்தான் அந்த எளிய அணுகுமுறை. அறுவை சிகிச்சைக்கு முன்னர் மயக்க மருந்து தரப்பட வேண்டும். வாய் மூலமாகத் தரப்படும் இந்த மயக்க மருந்தை உட்கொள்ளக் குழந்தைகள் அச்சமும் தயக்கமும் காட்டுகின்றனர். எனவே குழநதைகள் விரும்பிச் சுவைத்துச் சாப்பிடும் ''லாலிபாப்'' மிட்டாயில், இந்த மயக்க மருந்து கலந்து தரப்படுகிறது. குழந்தைகள் ஆர்வத்துடன் இந்த லாலிபாப்பைச் சாப்பிடுகின்றனர். சீக்கிரத்திலேயே அவர்கள் மயக்கநிலையை அடைந்து அறுவைசிகிச்சைக்குத் தயாராகி விடுகின்றனர்.

யூட்டா மாநிலப் பல்கலைக் கழகத்தில் இந்த ''லாலிபாப்'' சோதனை மேற்கொள்ளப்பட்டபோது. 2 முதல் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 'வாலிபாப்பை' மிகவும் விரும்பிச் சாப்பிடுவது கண்டறியப்பட்டது. அறுவை சிகிச்சை பற்றியோ மயக்க நிலை குறித்தோ குழந்தைகளுக்கு எந்தவித மருட்சியையும் அச்சத்தையும் அளிக்காமல், அவர்களை இணக்கமாகத் தயார் செய்வதற்கு ''லாலிபாப்'' கைகண்ட மருந்து என்கிறார் யூட்டா மாநிலப் பல்கலைக்கழக ஆய்வுக் குழுவைச் சேர்ந்த டாக்டர் பால்நெல்சன்.



# மூன்றுவீரர்கள்

முன்னொரு காலத்திலே மலைச்சிகரம் ஒன்றிலே பெண்ணொருத்தி வாழ்ந்து வந்தாள். அவளுக்கு மூன்று ஆண்குழந்தைகளும் ஒரு பெண்ணும் இருந்தனர். அவர்கள் மூவரும் வளர்ந்து பெரியவர்கள் ஆனார்கள், ஆண்கள் மூவரும் சிறந்த வீரர்களாயினர். பெண் மிகவும் அழகியாகவும், அறிவில் சிறந்தவளாகவும் வளர்ந்தாள்.

மூன்று சகோதரர்களும் ஒரு நாள் காட்டுக்கு வேட்டையாடச் சென்றார்கள். அந்த சமயத்தில் மலைச்சிகரத்தில் இருந்த தன் சகோதிரியை அங்கு வந்த விலங்குப்பூதம் ஒன்று அவளை தூக்கிச் சென்று விட்டது.

வேட்டையில் இருந்து வீடு திரும்பிய சகோதரர்கள் இந்தச் செய்தியை அறிந்ததும் வேதனையடைந்தனர். ஆத்திரம் கொண்டனர். கொஞ்சமும் தாமதியாது அவர்கள் வீட்டிலிருந்து காட்டை நோக்கிப் புறப்பட்டனர். எப்படியும் அந்த விலங்குப் பூதத்தைக் கொன்று தமது தங்கையோடு வீடு திரும்ப வேண்டுமென்பது தான் அவர்களின் நோக்கம்.

காட்டின் நடுவே அவர்கள் கண்ட காட்சி அவர்களைத் திடுக்கிட வைத்தது. அவர்களின் தங்கையை நடுவில் உட்காரவைத்து விலங்குப் பூதம் தனது உடலை அவளை சுற்றி அரணாக அமைத்திருந்தது.

இதைக் கண்ட மூத்தசகோதரன், ஒரு கூரிய கல்லினை எடுத்து அந்த விலங்குப் பூதத்தை நோக்கி வீசினான். கல்லால் தாக்கப்பட்ட விலங்குப்பூதம், அந்தக் கல்வந்த திசையை நோக்கி தலையை உயர்த்திற்று. மறுகணம் முதலாவது சகோதரன்பாய்ந்து சென்று தனது தங்கையையும் இழுத்துக் கொண்டே ஓடத் தொடங்கினான்.

இதைக்கண்ட விலங்குப்பூதம் அண்ணனையும் தங்கையையும் விரட்டிச்சென்றது. முதலாவது சகோதரனை அடித்து வீழ்த்தி விட்டு, அது அந்தப்பெண்ணையும் தூக்கிக்கொண்டு ஆகாயத்தில் பறக்கத் தொடங்கிற்று.

இந்த வேளையில் வில்வித்தையில் வல்லவனான இரண்டாவது சகோதரன், அந்த விலங்குப்பூதத்தை அம்பினால் குறிவைத்து அடித்தான். விலங்குப்பூதம் நிலைதடுமாறி நிலத்தை நோக்கி வீழ்ந்தது. அதன் பிடியில் இருந்து மீண்ட பெண்ணும் ஆகாயத்திலிருந்து கீழ்நோக்கி விழுந்தாள்.

மூன்றாவது சகோதரன் மிகத் துணிச்சலோடு ஆகாயத்தில் இருந்து விழுந்த தங்கையை கைகளில் ஏந்திக் கொண்டான் எவ்வித நோவுமின்றி அவளை கீழே இறக்கி விட்டான். விலங்குப்பூதமோ நிலத்தில் விழுந்து துண்டு துண்டாகச் சிதறி இறந்து போய் விட்டது.





உயிரினங்களிலேயே மிகமிக அதிசயிக்கத் தக்க கேட்கும் திறன் கொண்டவை வௌவால்களே. ஒரு செகண்டிற்கு 1,50,000 அதிர்வுகள் கொண்ட ஒலியலைகளை வௌவால்களால் துல்லியமாகக் கேட்க முடியும். ஆனால் மனித வால் அதிக பட்சமாக 20,000 அதிர்வுகளை மட்டும் கேட்க இயலும்.

## வௌவால்...

சகோதரர்கள் மூவரும் தமது சகோதரியோடு மலைச்சிகரத்திலிருந்த வீட்டுக்குத்திரும்பினார்கள். அவர்களைக் கண்ட தாய் மிகவும் ஆனந்தம் அடைந்தாள். தனது கையில் இருந்த பொன் சரிகைகளால் ஆன அழகிய சட்டை ஒன்றை அவள், அவர்களுக்கு காண்பித்தாள். பின்னர் கூறினாள்:

"என் அன்புச் செல்வங்களே உங்களிலே யார் உமது சகோதரியைக்காப்பாற்றுவதில் கூடிய பங்கை வகித்தீர்களோ, அவருக்கே இந்த அழகிய சட்டையைக் கொடுக்கப் போகிறேன்..."

இதைக்கேட்ட மூத்த மகன் கூறினான்:

"அம்மா, நான் எனது சகோதரியை முதலிலே கண்டேன். விலங்குப்பூதத்திடம் இருந்து அவளை நான்தான் மீட்டுவந்தேன்..."

"என் தங்கையை தூக்கிச் சென்ற விலங்குப்பூதத்தை நான்தான் அடித்து வீழ்த்தினேன்..." என்றான் இரண்டாவது மகன்.

"நிலத்திலே விழுந்துமோதி இறந்துபோகவிருந்த என்தங்கையை ஏந்தி, அவளை நான் காப்பாற்றினேன்..." என்று கூறினான் மூன்றாவது மகன்.

மூன்று பேரும் கூறியதைக் கேட்டுவிட்டு, தாய் அன்போடு கூறினாள்:

"என் அன்பான குழந்தைகளே, நீங்கள் மூவரும் ஒன்று சேர்ந்து சென்றமையினால் தான் தங்கை உயிர்பிழைத்துத் திரும்பினாள். நீங்கள் ஒருவருக்கு ஒருவர் உதவியிருக்கிறீர்கள் மூவருக்கும் நான் பொன் சட்டைகளைத் தருவேன் இன்னும் இரண்டை நான் பெற்றுக் கொண்டு உங்கள் மூவருக்கும் இவற்றைப் பரிசாக அளிப்பேன்..."

இதைக் கேட்ட மூன்று சகோதரர்களும், சகோதரியும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர்.



தட்டாரப் பூச்சிகள் பறக்கும் போதே சிறிய பூச்சிகளைப் பிடித்து உண்ணுகின்றன இவை 40 அடி தொலைவில் பறக்கும் ஒரு பூச்சியின் அசைவைக்கூடக் கண்டு பிடிக்கும் பார்வைத் திறன்கொண்டவை.



பிரிட்டனைச் சேர்ந்த ஒருவர் புதிதாக மூன்று குறுங்கோள்களை (Asteroids) கண்டுபிடித்துள்ளார்.

இவற்றைக் கண்டுபிடித்த விஞ்ஞானியின் பெயர் பிரியன் மானிங். லண்டனிலிருந்து 150 கிலோ மீட்டரில் கிட்டர்மின்ஸ்டர் என்னுமிடத்தில் வசிக்கும் அவர் வானை ஆராய்வதற்காகத் தம் வீட்டில் நிறுவியுள்ள 25 சென்டி மீட்டர் குறுக்களவுள்ள பிரதிபலிப்பான் (Reflector) தொலைநோக்கியைப் பயன்படுத்தி இக்குறுங்கோள்களைக் கண்டுபிடித்தார்.

சூரிய மண்டலத்தில் செவ்வாயின் சுற்றுப் பாதைக்கும் வியாழனின் சுற்றுப்பாதைக்குமிடையே எண்ணற்ற குறுங் கோள்கள் உள்ளன. ஒரு கிரகம் பல ஆயிரம் துண்டுகளாக உடைந்தால் எப்படி இருக்குமோ அந்தவிதமாக இக்குறுங் கோள்கள் உள்ளன. இவை ஒழுங்கற்ற வடிவம் கொண்டவை. ஒரு சில குறுங்கோள் தான் வடிவில் ஓரள வுக்குப் பெரியவை. மற்ற குறுங்கோள்களை அந்தரத்தில் பறக்கும் மலைகள் என வருணிக்கலாம்.





# குறுங்கோள்

புதிதாகக் குறுங்கோள்களைக் கண்டுபிடிப்பது என்பது மிகக் கடினம். சூரிய ஒளியை அவை பிரதிபலிப்பதை வைத்துத்தான் அவற்றைக் கண்டுபிடிக்க முடியும். அவை வடிவில் சிறியவை என்பதால் பிரதிபலிப்பு ஒளியானது மிகச்சிறிய, மங்கலான புள்ளியாகத்தான் தெரியும்.

அப்படியும்கூட இவர் புதிதாக மூன்று குறுங்கோள்களைக் கண்டுபிடித்துள்ளார். இதற்கு அவர் பயன்படுத்திய தொலைநோக்கி அவர் தாமாகச் சொந்தமாகத் தயாரித்ததாகும்.

இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட குறுங்கோள்களின் பட்டியல் அமெரிக்காவில் மாசசூசெட்ஸ் மாநில கேம்பிரிட்ஜ் நகரில் சர்வதேச வானவியல் அமைப்பின் கம்ப்யூட்டரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மானிங் கூறிய தகவல்களை இக்கம்ப்யூட்டரில் செலுத்தி ஆராய்ந்ததில் மானிங் கண்டுபிடித்த குறுங்கோள்கள் இதற்கு முன்னர் அறியப்படாதவை என்று நிரூபணமானது.

கடந்த எண்பது ஆண்டுகளில் பிரிட்டிஷ்காரர் ஒருவர் குறுங்கோள்களைக் கண்டுபிடிப்பது இதுவே முதல் தடவையாகும்.

# தபால் பெட்டி

புகழேந்தி படக்கதை புகழாரமாக இருந்தது. மருதமுத்துவுக்கு அரசவைப் புலவர் பட்டம் சேர திட்டம் தீட்டிய புகழேந்தியின் மன வேகம் கம்ப்யூட்டரையும் மிஞ்சி விட்டது.

**நல்லாலம் காசிநாதன்**
**கீழ்கொவளவேடு**

பிப்ரவரி '90 ரத்னபாலா வண்ணமலராக எழிற்கொஞ்சும் சிந்தனை மலராக அமைந்திருந்தது! 'தோல்' பற்றிய டாக்டரின் (டாக்டர் கு. கணேசன்) கடிதம், பல பயனுள்ள விவரங்களைத் தெளிவாக அறிவித்தது பாராட்டுக்குரியதாகும். விஞ்ஞான மேதைகள் வரிசையில் இடம் பெற்ற சார்லஸ் டார்வின் பற்றி செ.யோக நாதன் எழுதிய கட்டுரை அறிவுக்கு நல்ல விருந்தாகும். இடம் பெற்ற அனைத்தும் முக்கனியைப் பிழிந்திட்ட சாறாக இனித்தது.

சிறுவர் உள்ளத்தைச் சீர்படுத்தும் முயற்சி வரவேற்க வேண்டியதாகும். ஆசிரியரின் நல்ல முயற்சி நாள்தோறும் வளர-மலர-உயர வாழ்த்துகிறேன்.

**சீர்காழி இறையன்பன்**
**சீர்காழி**

பிப்ரவரி மாத ரத்னபாலாவில் 'புகழேந்தி' மற்றும் 'மடராஜாவும் மகா மந்திரியும்' படக் கதைகள் மதி நுட்பமான கதைகளாக இருந்தன. 'வேஷம் கலைந்தது' சிறுகதையில் பாக்கியராஜ், வியாபாரி வீரப்பனின் வேஷத்தைக் கலைத்த விதம் அருமை. வள்ளல் பதில்கள் அறிவு பொக்கிஷமாக விளங்கி வருகின்றது.

**ஆர்.நடராஜன்**
**என்.சாரதா**
**என்.சிவகுமார்**
**பரங்கிப்பேட்டை**

பிப்ரவரி மாத ரத்னபாலாவைப் படித்தோம். துணுக்குகளைச் சுவைத்தோம். பாடலை ரசித்தோம். அட்டைப் படத்தைப் பார்த்து மகிழ்ந்தோம்.

**எஸ்.தெட்சணாமூர்த்தி**
**நாகலூர்**

பிப்ரவரி மாத இதழ் மிக நன்றாக இருந்தது. அனைத்தும் சூப்பர். இதில் மடராஜாவும் மகா மந்திரியும் மிக அருமை. ராக்கெட் ராஜகுமாரி மிக விறு விறுப்பாக உள்ளது. கணித மேதை பற்றி கூறப்பட்டது மிகவும் அருமை.

**சி.சாமிநாதன்**
**சீர்காழி**

பிப்ரவரி மாத ரத்னபாலா வெகு சூப்பர். 'வேஷம் கலைந்தது' கதை நன்றாக இருந்தது. வள்ளல் பதில்கள் வெகு அருமை. கவிதைகள் அருமை.

**பா.சுலோசனா**
**பா.வசந்தன்**
**சிவகாசி**

இந்த மாத ரத்னபாலாவில் டாக்டரின் கடிதத்தில் 'உமிழ் நீர் சுரப்பி'களைப் பற்றிய கடிதம் மிகவும் அருமையாக இருந்தது. நர்சரி டிரெய்னிங் படித்த எனக்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. நன்றி.

**பி.பத்மாவதி**
**ஆலங்குளம்**

குழந்தைகளே!
டிவிகளுக்கு வண்ணம் தீட்டி,
பரிசு பெறுங்கள்!



சாலிடெர் டிவிக்களுக்கும், அவற்றில் உள்ள படங்களுக்கும் உங்கள் எண்ணம் போல் வண்ணம் தீட்டுங்கள்.

உங்கள் அருகில் உள்ள வசந்த் & கோ ஷோரூமில் நுழைவுத்தாள் கிடைக்கும். பூர்த்தி செய்த நுழைவுத்தாளை ஏதாவது ஒரு வசந்த் & கோ ஷோரூமில் கொடுங்கள்.

• பரிசுகள்:

ஒவ்வொரு நுழைவுத்தாளுக்கும், உங்கள் அபிமான கார்ட்டூன் பாத்திரங்களின் படங்களுடன் கவர்ச்சிகரமான ஏழு ஸ்டிக்கர் — லேபில்கள் கிடைக்கும்.

இத்துடன், சாலிடெர் டிவி வாங்கும் நுழைவுதாரருக்கு, கவர்ச்சிகரமான ஆச்சரியப் பரிசு காத்திருக்கிறது.

மேலும், சிறந்த நுழைவுதாரர்களுக்கு சிறப்பு பரிசுகளும் உண்டு!

**விரைந்து வாருங்கள்.**
**போட்டியின் முடிவு தேதி 31.3.90**




# வசந்த் & கோ

- 8 & 45, தெற்கு உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை-17.
- 20, ஆற்காட் ரோடு, கோடம்பாக்கம், சென்னை-24.
- 116, M.S. கோவில் தெரு, ராயபுரம், சென்னை-13.
- 191, புரசைவாக்கம் ஹைரோடு, சென்னை-10 (மோட்சம் தியேட்டர் அருகில்)
- 21-22, ஷண்முகம் ரோடு, தாம்பரம், சென்னை-45
- M.T.H. ரோடு, (இந்தியன் பாங்க் எதிரில்) பாடி, சென்னை-50.


Printed by N. P. S. S. SOUNDARAM at The Orient Litho Press, Sivakasi and Published on behalf of N. P. S. Publications by R. Jagadeesh Shankar, 8-4-152, Mundaga Nadar Street, Sivakasi. Editor : N. Narendran, 109, Nehru Street, Sivakasi-626123.





"RATHNABALA" CHILDREN'S MONTHLY Apr. 1990 REGD. No. TN/3/3
ஸ்ரீலங்காவில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு பெற்றது (பதிவு எண். 86/News/89)